13 MAY 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்

---

(1995, டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணையின்படி அச்சிடப்பட்டது.

1995, டிசெம்பர் மாதம் 22ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.20

தபாற் செலவு : ரூபா 3.55

## 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம்

[1995, திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ரு. 54/93

### 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் விரிவுப்பெயர் இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப்பெயர் இடப்படுகின்றது :—

"வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துபவர்களும், வைப்புக்களை ஏற்று அத்தகைய பணத்தை முதலிடுசெய்யும் தொழிலைக் கொண்டுநடாத்துபவர்களுமான ஆட்களுக்கு உரிமமளிப்பதற்கான நடவடிக்கைமுறை யொன்றை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காகவும்; அத்தகைய தொழில்கள் தொடர்பான கருமங்களை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.".

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவுக்கான கடைசிப் பத்தியை நீக்கிவிடுவதன் மூலம்; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக 'கம்பெனி' என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 449 ஆம் பிரிவில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கைக்கு வெளியே உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றையும், அல்லது ஏதேனும் வெளிநாட்டின் நியதிச்சட்டம் எதனையும் அரச பட்டயம் எதனையும் அல்லது உரிமையோலை எதனையும் பின்பற்றி அமைக்கப்பட்டதான கூட்டிணைப்புக் குழுவொன்றையும் அத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதான கூட்டிணைப்புக் குழுவொன்றையும் உள்ளடக்கும்; அத்துடன் மத்திய வங்கியை, அல்லது இச்சட்டத்துக்கான 1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வங்கிகள் நீங்கலாக இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான தனியார் கம்பெனியொன்றை உள்ளடக்குதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2—ஏ. 035843—1,915 (95/10)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(இ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றினால் அல்லது கூட்டிணைப்புக் குழுவொன்றினால் விண்ணப்பமொன்று செய்யப்படும் விடயத்தில், இலங்கையில் அதன் வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துவதில் உறப்பட்ட எல்லாக் கடப்பாடுகளையும் பொறுப்புகளையும் ஈடுசெய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நிதிகள் மத்திய வங்கியினால் கோரப்படுவதன்மேல் விடயத்துக்கேற்ப அத்தகைய கம்பெனியினால் அல்லது கூட்டிணைப்புக் குழுவினால் அவை ஏற்பாடுசெய்யப்படுமெனக் கூறுகின்றதும், அதன் பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்படுகின்றதுமான எழுத்திலான பொறுப்பேற்பும், அத்துடன் விடயத்துக்கேற்ப அத்தகைய கம்பெனி அல்லது கூட்டிணைப்புக்குழு எந்த நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதோ அல்லது அமைக்கப்பட்டதோ அந்நாட்டின் பண அதிகாரியிடமிருந்து பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைக்கொண்டுள்ள அறிக்கையொன்றும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்,

"இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதும், 3 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றுக்காக விண்ணப்பித்துள்ளதுமான ஏதேனும் கம்பெனியை அத்துடன் அத்தகைய கம்பெனியின்" என்ற சொற்களுக்குப் பதிலாக முறையே "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதும், 3 ஆம் பிரிவின்கீழான உரிமமொன்றுக்காக விண்ணப்பித்துள்ளதுமான ஏதேனும் கம்பெனியை அல்லது கூட்டிணைப்புக் குழுவை அத்துடன் அத்தகைய கம்பெனியின் அல்லது கூட்டிணைப்புக் குழுவின்" என்ற சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டவையும், அத்தகைய ஒவ்வொரு தீர்மானத்தின் பின்னரும் உரிமத்துக்காக விண்ணப்பிக்கின்றவையுமான எல்லாக் கம்பெனிகளுக்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டவையும், அத்தகைய ஒவ்வொரு தீர்மானத்தின் பின்னரும் உரிமத்துக்காக விண்ணப்பிக்கின்றவையுமான எல்லாக் கம்பெனிகளுக்கும் கூட்டிணைப்புக் குழுக்களுக்கும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளும் கூட்டிணைப்புக் குழுக்களும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் விண்ணப்பகாரரினால் பின்பற்றப்படுமெனத் தாம் திருப்திபடைந்ததும்", என்ற சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் விண்ணப்பகாரரினால் பின்பற்றப்படுமெனத் திருப்திப்பட்டும் தேசிய பொருளாதாரத்தின் நலன்களைக் கவனத்துட்கொண்டும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(உ) அது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றாகவிருக்குமிடத்து, அத்தகைய வங்கி எந்த நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதோ அந்த நாட்டின் தோதான அதிகாரியினால் அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவினால் நடைமுறைப்படுத்துவதற்கான அதன் உரிமம் அல்லது அதிகாரம் இல்லா ் க்கப்பட்டதாக அல்லது மீளப் பெறப்பட்டதாகவிருக்குமிடத்து;".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 11அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 11அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"பணச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு ஏற்புடைய பால தாதல்.

11அ. இச்சட்டத்தின் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் பிரிவுகளிலுள்ளஎதுவும், பணச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் பணச்சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை எவ்வகையிலேனும் பாதித்தலாகாது.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 13அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"நடமாடு வங்கித் தொழிற் கூறுகள்.

13அ. (1) பன்னிரெண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலுள்ள ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், பிரதி ஆளுநர், அத்தகைய நோக்கத்துக்காகப் பணச்சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளின்மீது, காலத்துக்குக்காலம், அவர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைய, நடமாடு வங்கித்தொழிற் கூறுகளைத் தாபிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கலாம்.

(2) பிரதி ஆளுநர், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் அறிக்கையின்மீது, எழுத்தில் ஆக்கப்பட்ட கட்

டளையின் மூலம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை மீளப்பெறலாம் அல்லது, அத்தகைய அங்கீகாரத்தின் நியதி நிபந்தனைகளை வேறுபடுத்தலாம் என்பதுடன், அம்முடிபு பற்றிய அறிவித்தல் இயைபான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்குத் தெரிவிக்கப்படுதலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 14அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 14அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

“அமைப்புப் புறவிதிகளும் அமைப்பக விதிகளும் அங்கீகாரத்துடன் மாற்றப்படுதல்.

14அ. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 449 ஆம் பிரிவில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான கம்பெனியொன்றாகவுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, அதன் அமைப்புப் புறவிதிகளையும் அமைப்பக விதிகளையும் பணச்சபையின் முன்கூட்டிய எழுத்திலான அங்கீகாரமில்லாது மாற்றுதலாகாது.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “அதன் பெயரில் ஒரு பாகமாக .............................. பயன்படுத்துதல் ஆகாது;” என்ற சொற்களுக்குப் பதிலாக “அதன் பெயரின் ஒரு பாகமாக .............................. பணச்சபையின் முன்கூட்டிய எழுத்திலான அங்கீகாரத்துடனன்றி, பயன்படுத்துதல் ஆகாது;” என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக” என்ற சொற்களுக்குப் பதிலாக “பணச்சபையின் முன்கூட்டிய எழுத்திலான அங்கீகாரத்துடனன்றி, ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக,” என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் “துணை நிலை நிறுவனமொன்றைக்” என்ற சொற்களுக்குப் பதிலாக “தொழில்களுக்குள் ஒன்றோ பலவற்றையோ கொண்டுநடாத்தும் துணை நிலை நிறுவனமொன்றைக்” என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் காப்புவாசகத்தின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) என்னும் பந்திகளில் “தொழிலைத் தனித்தாக்” என்ற சொற்களுக்குப் பதிலாக “தொழிலைக்” என்ற சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(எ) பணச்சபையின் அபிப்பிராயத்தில் வங்கித்தொழிலுக்கும் நிதி வழங்கலுக்கும் முரணானதாகவிராத எவ்வகையினதுமான தொழிலைக் கொண்டுநடாத்துவதான.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 17அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும் :—

"உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியினால் ஐம்பது சதவீதமான அல்லது அதற்குக் குறைவான பங்குகள் கொள்வனவு செய்யப்படுதல்.

17அ. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி, நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியல்லாத ஏதேனும் கம்பெனியில் பங்குகளைக் கொள்ளுதலோ அல்லது வைத்திருத்தலோ ஆகாது ; அத்துடன்—

(அ) அத்தகைய வங்கியினால் கொள்ளப்பட்ட பங்கு வைத்திருக்கையெதுவும், காலத்துக்குக்காலம் பணச்சபை தீர்மானிக்கக்கூடியவாறாக அதன் மூலதன நிதிகளின் அத்தகைய நூற்று வீதத்தை விஞ்சுதலாகாது ; அத்துடன்

(ஆ) (வங்கியின் துணைநிலை நிறுவனங்களாகவுள்ள கம்பெனிகள் நீங்கலாக) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளின் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட கூட்டுமொத்தத் தொகை, பணச்சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அதன் மூலதன நிதிகளின் அத்தகைய நூற்றுவீதத்தை விஞ்சுதலாகாது :

ஆயின் எவ்வாறாயினும், உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி, மேலே குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சாமல், நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்றல்லாத ஒரு பகிரங்கக் கம்பெனியை நிதி தொடர்பாக நிலைபெறச் செய்வதற்கு என அதனை மறுசீரமைக்கும் நோக்கத்துக்காக அத்தகைய கொள்ளுதல் அவசியமானவிடத்து, அத்தகைய கம்பெனியில் பங்குகளைக் கொள்ளலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது :—

(அ) உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியாகவுள்ள அத்தகைய வங்கியின் துணைநிலைக் கம்பெனியிலான முதலீடு ;

(ஆ) பணச்சபையின் அங்கீகாரத்துடன் கொள்ளப்பட்ட வங்கியின் வேறேதேனும் துணைநிலைக் கம்பெனியிலான முதலீடுகள் ;

(இ) வங்கிக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் கடனைத் திருப்திப்படுத்தும்போது, அல்லது பங்கு வழங்கலொன்றைப் பொறுப்பேற்பதன் விளைவாக அத்தகைய வங்கி கொள்ளக்கூடிய ஏதேனும் பங்கு வைத்திருக்கை ;

(ஈ) பணச்சபையின் கருத்தில் வங்கித்தொழில் நிதி சார் துறைகளில் மனித மூலவள அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்தி என்பவற்றின் மூன்னேற்றுகைக்கும் மேம்படுத்துகைக்குமாகத் தாபிக்கப்பட்டுள்ளதான ஏதேனும் கம்பெனியிலான பங்குகளின் ஏதேனும் கொள்ளுகை அல்லது பற்றுதல் :

ஆயின் இப்பங்குகள் கொள்ளப்பட்டதன் விளைவாக வங்கியின் மொத்த மூதலீடு (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணச்சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக மூலதன நிதிகளின் நூற்று விதத்தை விஞ்சுமிடத்து, வங்கியானது அத்தகைய விஞ்சுதலான பங்குகளை, அத்தகைய கொள்ளுதல் திகதியிலிருந்து இரண்டாண்டுகளினுள் அல்லது பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நீட்டிய காலப்பகுதியினுள் கையாளுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக "நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி" என்பது, 1987 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதி பரிவர்த்தனையில் அதன் பிணையங்கள் நிரற்படுத்தப்பட்ட அல்லது விலை கோரப்பட்ட ஏதேனும் பகிரங்கக் கம்பனி என்று பொருளாகும்.".

மூதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. மூதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், —

(அ) இப்பிரிவு தொடங்கும் திகதிக்கு மூன்னர் ஓர் உரிமம் வழங்கப்பட்டிருப்பின், இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத தொகையிலான ஒப்புரவு மூலதனத்தை எல்லா நேரங்களிலும் பேணுதல் வேண்டும்;

(ஆ) இவ்வுட்பிரிவு தொடங்கிய திகதிக்குப் பின்னர் ஓர் உரிமம் வழங்கப்பட்டிருப்பின், நூறு மில்லியன் ரூபாவுக்கு அல்லது பணச்சபை வங்கித்தொழில் முறைமையின் நிலைபேறான தன்மையையும் உறுதி நிலையையும் தேசிய பொருளாதாரத்தின் நலனையும் அவர்களின் ஒருப்பாட்டுடனும் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக் கூடிய அத்தகைய வேறு தொகைக்குக் குறையாத ஓர் ஒப்புரவு மூலதனத்தை எல்லா நேரங்களிலும் பேணுதல் வேண்டும்.

(2) "ஒப்புரவு மூலதனம்" பின்வருமாறு பொருளாதல் வேண்டும் :—

(அ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகவிருப்பின் செலுத்தப்பட்ட மூலதனம்;

(ஆ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகவிருப்பின் தலைமையலுவலகத்தினால் அத்தகைய வங்கிக்குக் குறித்தொதுக்கப்பட்ட தொகை.

(3) (அ) பணச்சபையானது, ஒரு வங்கியின் வைப்புப் பொறுப்புக்களை அல்லது எதிர்பாராப் பொறுப்புகளுட்பட மொத்தப் பொறுப்புகளை அல்லது மொத்தச் சொத்துக்களை அல்லது சொத்துக்களின் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வகுதியைக் கவனத்திற்கொண்டு இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒப்புரவு மூலதனமாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த தொகைகளெனக் குறிக்குரைக்கப்பட்ட தொகைகளைக் காலத்துக்குக் காலம் வேறுபடுத்தப்படலாம்.

(ஆ) தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த ஒப்புரவு மூலதனம், பொறுப்புகள் அல்லது சொத்துக்களைத் தொடர்புறுத்தி விதித்துரைக்கப்படும்போது அத்தகைய தொகையைக் கணிக்கும் நோக்கத்துக்காக, மூலதனமும், பொறுப்புகளும் அல்லது சொத்துகளும், தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கவனத்திற்கொண்டு பணச்சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வகையினவாகயிருத்தலும் அத்தகைய முறையில் கணிக்கப்படுதலும் வேண்டும்.

(இ) பணச்சபையானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒப்புரவு மூலதனம் தொடர்பில் அதனால் செய்யப்பட்ட ஏதேனும் வேறுபாட்டை எல்லா உரிமமளிக்கப்பட்ட வர்த்தகவங்கிகளுக்கும் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(ஈ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அதன் ஒப்புரவு மூலதனத்தை அதிகரிக்க வேண்டுமென அத்தகைய வேறுபாட்டினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, அதனால் பணச்சபைக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, அத் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்கெனப் பன்னிரண்டு மாத காலப்பகுதி, அல்லது பணச் சபையினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய நீட்டிய காலப் பகுதி அதற்கு அளிக்கப்படுதல் வேண்டும்.”.

(2) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

“(5) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி பணச்சபையின் முன்கூட்டிய எழுத்திலான அங்கீகாரமில்லாது அதன் ஒப்புரவு மூலதனத்தைக் குறைத்தலாகாது.”;

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

“(7) (அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் எல்லா நேரங்களிலும், பணச்சபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான மூலதன நிறைவு விகிதத்தைப் பேணிவருதல் வேண்டும்: பேணப்பட வேண்டிய அத்தகைய விகிதத்தைத் தீர்மானிப்பதில் பணச்சபையானது செயல்முறைக்குகந்த அளவு வரை, பன்னாட்டிலுள்ள சர்வதேச தீர்த்தலைக்கனுக்கான வங்கியினால் தரப்பட்டுள்ள மூலதன நிறைவுக்கான வழிகாட்டு நெறிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ)வின் குறிப்பீடு செய்யப்பட்ட மூலதன நிறைவு விகிதத்திலான ஏதேனும் வேறுபாடு பணச்சபையினால் எழுத்தில் ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும்; ஆயின், அதன் மூலதனத்தை அதிகரிக்குமாறு அத்தகைய வேறுபாட்டினால் தேவைப்படுத்தப்படும் ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கும், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்கெனப் பன்னிரண்டு மாத காலப்பகுதி அல்லது பணச்சபையினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய நீட்டிய காலப்பகுதி அளிக்கப்படுதல் வேண்டும்.”; அத்துடன்

(4) அப்பிரிவின் (8)ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்.

(5) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவில் “மூலதனம் அல்லது மூலதன நிதியங்கள்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஒப்புரவு மூலதனம் அல்லது மூலதன நிதியங்கள்” என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"குறித்த சில சூழ்நிலைகளில் பாகங்கள் III, V, VI என்பன கரைகடந்த வங்கித் தொழிலுக்கு ஏற்புடையனவாகாதிருத்தல்.

24. (1) இப்பாகத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த நடைமுறைகள் எல்லாம் அதன் கரைகடந்த கூறினூல் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் பாகங்கள் III, V, VI என்பன அத்தகைய கரைகடந்த வங்கித் தொழில் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

(2) பணச்சபையானது கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், இச்சட்டத்தின் பாகங்கள் III, V, VI என்பவற்றில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும், பொதுவாக அல்லது வதிவோருடன் மட்டுமான அதன் கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் எல்லாக் கரைகடந்த வங்கித் தொழில் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, "25 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்படும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "வதிபவரொருவருடன் 25ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்படும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"குறித்தசில சூழ்நிலைகளில் பணச்சட்டத்தின் Vஆம் அத்தியாயத்தின் பாகங்கள் III, VI, VII என்பன ஏற்புடையனவாகாதிருத்தல்.

29. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பணச்சட்டத்தின் Vஆம் அத்தியாயத்தின் பாகங்கள் III, VI, VII என்பவற்றின் ஏற்பாடுகள், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

(2) பணச்சபையானது, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், (422ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் Vஆம் அத்தியாயத்தின் பாகங்கள் III VI, VII என்பவற்றின் ஏற்பாடுகள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த எல்லா வங்கித்தொழில் தொடர்பிலும் பொதுவாக அல்லது வதிவோருடன் மட்டுமான அதன் கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆ என்ற பிரிவைத்தவிர பாகம் IVஅ இத்தால் நீக்கிவிடப்படுகின்றது. பிரிவு 34 (ஆ) தவிர பாகம் IVஅ வை நீக்கிவிடுதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "இப்பாகத்தின்கீழ் பணச்சபையால் அதிகாரமளிக்கப்பெற்ற உரிமமளிக்கப்பெற்ற வர்த்தக வங்கி ஒன்று இலக்கமிடப்பட்ட கணக்கொன்றைத் திறக்குமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரிமமளிக்கப்பெற்ற வர்த்தக வங்கி ஒவ்வொரு இலக்கமிடப்பட்ட கணக்கொன்றைத் திறக்குமிடத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் —

"(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக "இலக்கமிடப்பட்ட கணக்கு" என்பது பணச்சபையினால் நிர்மாணிக்கப்பட்டதான ஓர் இலக்கம், குறியீடு, சொல் அல்லது அத்தகைய வேறு வழிவகையினால் மட்டுமே அடையாளங் காணப்படுகின்றதான, நீக்கஞ்செய்யப்பட்ட 34அ என்னும் பிரிவின்கீழ் பணச்சபையினால் அதிகாரமளிக்கப்பெற்ற ஓர் உரிமமளிக்கப் பெற்ற வர்த்தக வங்கியுடன் திறக்கப்பட்ட ஒரு கணக்கு என்று பொருளாகும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அதன் ஐந்தொகையையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அதன் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையையும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அதன் ஐந்தொகையையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அதன் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையையும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 38அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 38அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், தகைமை பெற்ற கணக்காய்வாளர்களின் நிரலை வழங்குதல்.

38அ. (1) பணச்சபையானது, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கணக்குகளைக் கணக்காய்வதில் அனுபவம் பெற்றவர்களும் தகுதிவாய்ந்தவர்களும் தகைமை பெற்றவர்களுமான கணக்காய்வாளர்கள் ஈடுபடுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான தேவையைக் கவனத்திற்கொண்டு, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு வழிகாட்டு நெறிகளை வழங்கலாம்: அவர் அத்தகைய வழிகாட்டு நெறிகளுக்கிணங்க, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்குத் தகைமை பெற்ற அத்தகைய எண்ணிக்கையிலான கணக்காய்வாளர்களைக் காலத்துக்குக்காலம் தெரிவு செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தெரிவுசெய்யப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளர்களின் நிரலொன்றை எல்லா உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கும் அனுப்புதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட நிரலிலிருந்து அதன கணக்குகளைக் கணக்காய்வு செய்யும் நோக்கத்துக்காகக் கணக்காய்வாளர்களைத் தெரிவு செய்வது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் எல்லாவற்றினதும் கடமையாதல் வேண்டும்.".

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கணக்காய்வு செய்வதற்கென, தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரை ஆண்டு தோறும் நியமித்தல் வேண்டும்." என்ற சொற்களுக்குப் பதிலாக "கணக்காய்வு செய்வதற்கென, 38அ எனும் பிரிவின் கீழ் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட நிரலிலிருந்து தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரை ஆண்டு தோறும் நியமித்தல் வேண்டும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(3அ) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், அவ்வுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையைப் பெற்றதன்மேல் கணக்காய்வாளர்களைப் பின்வருமாறு செய்யுமாறு கோரலாம் :—

(அ) கணக்காய்வு தொடர்பாகப் பணச்சபை அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய மேலதிகத் தகவலைச் சமர்ப்பித்தல் ;

(ஆ) வங்கித்தொழிலினதும் அலுவல்களினதும் கணக்காய்வு நோக்கெல்லையை விரிவுபடுத்தல் அல்லது நீடித்தல்;

(இ) தமக்குத் தேவைப்படும் அத்தகைய வேறு பரிசோதனையை நிறைவேற்றுதல் அல்லது குறிப்பிட்ட ஒரு கருமம் தொடர்பிலான ஏதேனும் நடவடிக்கை முறையை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு விதந்துரைத்தல் ; அத்துடன்

(ஈ) பந்திகள் (ஆ) (இ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களுள் எவற்றின் மீதும் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தல் ;

அத்துடன் அத்தகைய மேலதிகக் கணக்காய்வுக்கான அல்லது அத்தகைய வேறு சோதனைக்கான செலவுத்தொகை மத்திய வங்கியினால் ஈடு செய்யப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) ஆள் எவரும் —

(அ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் சித்த சுவாதீனமற்றவராகக் காணப்பட்டிருப்பாரெனின் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருப்பாரெனின் ; அல்லது

(ஆ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்ற ஒருவர் அல்லது வங்கி முறிந்த ஒருவர் என வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவரான அல்லது வங்கி முறிந்தவரான ஆளொருவராக இருப்பாரெனின் ; அல்லது

(இ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துவதும் மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாரெனின் ; அல்லது

(ஈ) வேறேதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஊழியரொருவராக அல்லது பணிப்பாளரொருவராக அல்லது வங்கியின் (பிரதான நிறைவேற்றுநர் அல்லாத) ஊழியரொருவராக இருப்பாரெனின் ;

உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுதலோ அல்லது தேர்ந்தெடுக்கப்படுதலோ ஆகாது ;" அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியின் செயலாளர்.

43. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 176 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கம்பெனியொன்றின் செயலாளருக்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகைமைகளைக் கொண்ட ஆளொருவரை அதன் செயலாளராக நியமித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஊழியரொருவராக எலவே இருந்தாலொழிய அவ்வங்கியின் ஊழியராக வருதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஆள் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் செயலாளராகத் தொடர்ந்து தொழிற்படுத்தப்படும் காலவரை வேறேதேனும் நிறுவனத்தின் ஊழியராக வருதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஒப்புரவு மூலதனம், ஒதுக்குகள், வைப்புகள் என்பவற்றையும் வேறு இயைபான விடயங்களையும் கவனத்திற் கொண்டு, அத்தகைய வங்கியினால் —

(i) ஏதேனும் ஒரு கம்பெனிக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, குழுமத்துக்கு, ஆட்களின் அல்லது தனியாட்களின் கழகத்துக்கு;

(ii) கூட்டு மொத்தத்தில் —

(அ) தனியாளொருவருக்கு, அவரது மிக நெருங்கிய உறவினர்களுக்கு, அல்லது அவர் கணிசமான அக்கறைகொண்டுள்ள ஒரு கம்பெனிக்கு அல்லது குழுமத்துக்கு ;

(ஆ) ஒரு கம்பெனிக்கும் அத்துடன் பின்வருவனவற்றுள் ஒன்றிற்கும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றிற்கும் :

(அஅ) அதன் துணைநிலை நிறுவனங்களுக்கு ;

(ஆஆ) அதன் வைத்திருக்கைக் கம்பெனிக்கு ;

(இஇ) அதன் இணைப்புக் கம்பெனிக்கு ;

(ஈஈ) அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலை நிறுவனத்துக்கு ; அல்லது

(உஉ) அத்தகைய கம்பெனி, அல்லது அதன் துணைநிலை நிறுவனம், அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலை நிறுவனம் கணிசமான அக்கறை கொண்டிருப்பதான கம்பெனியொன்றுக்கு,

அளிக்கப்படக்கூடிய கடனுதவியின் உச்சத்தொகை.

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக, ஒரு கம்பெனியின் பங்குகளில் இருபது சதவீதத்துக்குக் குறையாதவையும் ஐம்பது சதவீதத்திற்கு மேற்படாதவையும் இன்னொரு கம்பெனியினால் வைத்திருக்கப்படும் இடத்து, முன்னைய கம்பெனி அந்த மற்றையக் கம்பெனியின் "இணைப்புக் கம்பெனி" என்றாகக் கருதப்படுகின்றது".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 46அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தில் 46 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 46அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அறவிட முடியா ஐயத் தலைக்கடன்களுக்குப் பொதுவானவையும் குறிப்பிட்டவையுமான ஏற்பாட்டுத் தேவைப்பாடுகளை விதித்தல்.

46அ. பணச்சபையானது, அறவிடமுடியா ஐயக் கடன்கள் தொடர்பாகப் பொதுவானவையும் குறிப்பிட்டவையுமான ஏற்பாடுகள், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் செய்யப்படுவதனைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு விதிக்கப்பட்ட அத்தகைய தேவைப்பாட்டுக்கு இசைந்தொழுகுவது எல்லா உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினதும் கடமையாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "எடுக்கப்படல் வேண்டும்." என்ற சொற்களுக்குப் பதிலாக "எடுக்கப்படல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகள், கடனுதவியொன்று அளிக்கப்பட்ட நேரத்தில் வங்கியின் ஊழியராகவிருந்தவரும், கடனுதவியானது அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஒரு திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டவருமான பணிப்பாளருக்கு ஏற்புடையனவாதலாகாது." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (11) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் —

"(11அ) ஏதேனும் நிதியாண்டின்போது பணிப்பாளரொருவருக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரின் மிக நெருங்கிய உறவினரொருவருக்கு அல்லது அத்தகைய பணிப்பாளர் கணிசமான அக்கறை கொண்டுள்ள ஏதேனும் தாபனத்திற்கு இப்பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் ஏதேனும் கடனுதவி அளிக்கப்படுமிடத்து, அத்தகைய கடனுதவி அவ்வாண்டிற்கான கணக்குகளில் வெளிக்காட்டப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் கீழான தேவைப்பாடு, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனிகள் சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டுக்கு மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும்; அதனை மதிப்புக் குறைப்பதாக இருத்தலாகாது.".

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 48 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்தலும் கொள்ளுதலும்.

48அ. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, பணச்சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக அதன் மூலதன நிதியங்களின் அத்தகைய நூற்றுவீதத்தைக் கூட்டுமொத்தத்தில் விஞ்சுகின்றதும் அதன் வங்கித்தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக அல்லது அதன் பணியாட்டொகுதியினருக்கு வீடமைத்துக் கொடுக்கும் அல்லது வாழ்வசதிகளை ஏற்பாடு செய்யும் நோக்கத்துக்காக நியாயமாகத் தேவைப்பட்டவை தவிர்ந்ததுமான ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை அல்லது அதிலுள்ள ஏதேனும் உரிமையைக் கொள்வனவு செய்தலாகாது அல்லது வேறெந்த வகையிலும் கொள்ளுதலாகாது :

ஆயின், இந்த மட்டுப்பாடு, கடனொன்றுக்கான பிணைப் பொறுப்பாக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை ஏற்றுக்கொள்வதனையும் கடனைச் செலுத்தத்தவறும் பட்சத்தில் ஆகக்கிட்டிய ஒரு சந்தர்ப்பத்தில் அது விற்கப்படும்வரை அத்தகைய அசைவற்ற ஆதனத்தை வைத்திருப்பதிலிருந்தும் வங்கியைத் தடுத்தலாகாது.".

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 49 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 49அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"கடனிறுக்க வகையின்மையின் விடயத்தில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குத் தெரிவித்தல்.

49அ. ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி தனது கடப்பாடுகளை ஈடுசெய்ய இயலாதுள்ளதென அல்லது ஈடுசெய்ய இயலாதுள்ள சாத்தியங்கொண்டுள்ளதென அல்லது கடனிறுக்க வகையற்றதாக வரவுள்ளதென அல்லது வைப்பீட்டாளர்களுக்கும் மற்றும் வேறு கடன் கொடுத்தோருக்கும் கொடுமதியாகவுள்ள கொடுப்பனவுகளை இடைநிறுத்தவுள்ளதெனக் கருதுகின்றவிடத்து, அந்நிகழ்வு பற்றி வங்கியானது உடனடியாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.".

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VII என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் பாகம் VII அ என்பதாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பாகம் VIIஅ என்பதை உட்புகுத்துதல்.

## "பாகம் VIIஅ

### உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் வங்கித் தொழிலை உரித்தாக்குதல்

ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் வங்கித் தொழிலை உரித்தாக்கும் கட்டளை.

49 அ. (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் செய்யப்பட்ட அறிக்கையொன்றின் மீது, பணச்சபையானது, ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி இலங்கையில் வங்கித் தொழிலைக் கொண்டுநடாத்த இயலாதுள்ளதெனவும், அல்லது அதன் வைப்பீட்டாளர்களினதும் (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "செலுத்தத் தவறும் வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களை நடாத்தியுள்ள வேறு ஆட்களினதும் கோரிக்கைகளை ஈடுசெய்ய இயலாதுள்ளதெனவும் அத்துடன் அது தொழிலில் தொடர்ந்திருப்பது பண முறைமைக்கும் வங்கித்தொழில் முறைமைக்கும் தேசிய பொருளாதாரத்துக்கு பாரதூரமான பொருளாதார நட்டத்தை உட்படுத்தும் சாத்தியங் கொண்டதெனவும் அவற்றைப் பங்கமான முறையில் பாதிக்கக் கூடிய சாத்தியங்கொண்டதெனவும் திருப்திப்படுமிடத்து பணச்சபையானது, வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணுகை எது எவ்விதமிருப்பினும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் எத்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அத்தொழிலாகவுள்ளதும் அல்லது பணச்சபை தீர்மானிக்கக் கூடியவாறாக அதன் அத்தகைய பாகமாகவுள்ளதும் செலுத்தத்தவறும் வங்கியினால் கொண்டு நடத்தப்படுவதுமான தொழிலை, அத்தகைய உப உரித்தாக்குதலுக்குச் சம்மதிக்கின்ற (இச்சட்டத்தின் இப்பாகத்தில்" கொள்ளும் வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) இன்னுமோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரித்தாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக " செலுத்தத்தவறும் வங்கியினால் கொண்டு நடாத்தப்படும் தொழில்" என்பது பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் :—

(அ) இயைபான திகதிக்கு முற்போந்த நாளன்று செலுத்தத் தவறும் வங்கியினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் எல்லாம் (காசு, பிணைகள், ஒதுக்கு நிதிகள், முதலீடுகள், அத்துடன் வைப்புக்கள் உட்பட);

(ஆ) இயைபான திகதிக்கு முற்போந்த நாளன்று செலுத்தத் தவறும் வங்கியினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தில்

அல்லது அதிலிருந்து எழுகின்ற உரிமைகள், தத்துவங்கள், சிறப்புரிமைகள், அதிகாரங்கள் அத்துடன் அக்கறைகள் எல்லாம் ;

(இ) இயைபான திகதிக்கு முற்போந்த நாளன்று செலுத்தத்தவறும வங்கிக்குள்ளபொறுப்புகள் எல்லாட ; அத்துடன்

(ஈ) இலங்கையில் அத்தகைய பொறுப்பு முயற்சிகள் தொடர்பான அல்லது அதனுடிணைந்த புத்தகங்கள், கணக்குகள் அத்துடன் ஆவணங்கள் எல்லாம்,

49இ. நாற்பத்தொன்பது ஆ என்பதன் கீழான கட்டளையெதுவும், பின்வருமாறு செய்யப்பட்டாலொழிய பணச்சபையினுல் ஆக்கப்படலாகாது :—

கொள்ளும் வங்கி நியதிநிபந்தனைகளுக்கு இணங்கியொழுக உடன்பட்ட பின்னர் கட்டளை ஆக்கப்படவேண்டும்.

(அ) உத்தேசிக்கப்பட்ட கொள்ளும் வங்கி, உரித்தாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செலுத்தத்தவறும் வங்கியின் தொழிலைத் தகுதி வாய்ந்தவொரு முறையில் கொண்டு நடாத்துவதற்கும், அத்துடன் உரித்தாக்கப்படுவதற்வதற்கும், அத்துடன் உரித்தாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொழில் குறித்து அல்லது அது தொடர்பாகச் செலுத்தத் தவறும் வங்கிக்கு அதன் வைப்பீட்டாளர்கள்பாலும் கடன் தருநர்பாலும் உள்ள பொறுப்புக்களை ஈடுசெய்வதற்கும் ஆற்றலுடையதெனப் பணச்சபை திருப்திப்பட்டாலொழியவும் ;

(ஆ) உத்தேசிக்கப்பட்ட கொள்ளும் வங்கி —

(i) உரித்தாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொழில் குறிந்த அல்லது அது தொடர்பாகச் செலுத்தத் தவறும் வங்கியின் ஏலவேயுள்ள சொத்துக்கள் எவையும் பயன்படுத்தப்படவேண்டிய முறையும் அத்துடன் உரித்தாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொழில் குறித்து அல்லது அது தொடர்பாகச் செலுத்தத்தவறும் வங்கியின் பொறுப்புக்கள் எவையும் ஈடுசெய்யப்பட வேண்டிய முறையும் ;

(ii) இறைமை கொண்ட அரசாங்கமொன்றுக்குச் செலுத்தத் தவறும் வங்கியிடமிருந்து வருமதியாகவுள்ள கொடுப்பனவுகள் எவையும் செய்யப்படவேண்டிய முறையும் தொடர்பாகப் பணச்சபையினுற் குறித்துரைக்கப்படக்

கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு எழுத்தில் உடன்பட்டாலொழியவும்.

ஒரு கட்டளையின் பயன்.

49ஈ. செலுத்தத்தவறும் வங்கியின் தொழிலை அல்லது அதன் பாகத்தைக் கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்குகின்ற பிரிவு 49 ஆ என்பதன் கீழான கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து (அது இச் சட்டத்தின் இப்பாகத்தில் "இயைபான திகதி" எனக் குறிப்பிடு செய்யப்படும்) —

(அ) கொள்ளும் வங்கி, செலுத்தத்தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழிலைக் கட்டுப்படுத்தலும் உடைமை கொண்டிருத்தலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய செலுத்தத்தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழிலின் கைமாற்றம் பெறுபவராக வருதலும் வேண்டும் ;

(ஆ) கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குச் செலுத்தத்தவறும் வங்கிக்கு இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம், கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டிராத அதன் தொழிலின் அத்தகைய பாகத்தைச் செலுத்தத் தவறும் வங்கி கொண்டு நடாத்துவதனை இயலச் செய்வதற்கு அவசியமான அளவுக்குத் திரிபுபடுதல் வேண்டும் ;

(இ) கொள்ளும் வங்கி, 49இ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அத்தகைய வங்கியினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கும் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய வங்கிக்குப் பணிச்சபை விடுக்கக்கூடியவாறான அத்தகைய வேறு பணிப்புகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குச் செலுத்தத் தவறும் வங்கிக்கு இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமம், அத்தகைய வங்கியின் உள்ளூர் அத்துடன் கரை கடந்த வங்கித்தொழில், கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்படுகின்றவிடத்து, இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

49உ. இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், செலுத்தத்தவறும் வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள், கொள்ளும் வங்கிக்குக் கிடைக்கக்கூடியன வாக்கப்படாத விடயத்தில், செலுத்தத்தவறும் வங்கியின் எவரேனும் வெளிநாட்டு நாணய வைப்பீட்டாளரின் கோரிக்கைகளை ஈடுசெய்வதற்குக் கொள்ளும் வங்கிக்குள்ள பொறுப்பு, செலுத்தத்தவறும் வங்கியின் தொழிலைப் பரிசீலனை செய்வதன்மேல் பணச்சபையினால் வகுத்தமைக்கப்படக்கூடியவாறாக, அத்தகைய வைப்பீட்டாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான ஏதேனும் திட்டத்தின் நியதி நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளுவதற்கு உடன்படுகின்றவர்களான அத்தகைய வைப்பீட்டாளர்கள் தொடர்பில் மட்டுமே அத்துடன் அத்தகைய திட்டத்தில் தரப்பட்டுள்ள அளவுவரை மட்டுமே இருத்தல் வேண்டும்; வெளிநாட்டு நாணய வைப்பீட்டாளர்கள் தொடர்பில் கொள்ளும் வங்கிக்குள்ள பொறுப்புடைமையின் அளவு.

ஆயின், எவ்வாறாயினும், கொள்ளும் வங்கிக்கு அத்தகைய வெளிநாட்டு நாணய வைப்புக்கள் கிடைக்கக் கூடியனவாக்கப்படும் பட்சத்தில் அல்லது கொள்ளும் வங்கி, செலுத்தத் தவறும் வங்கியின் வெளிநாட்டிலுள்ள அத்தகைய நாணய வைப்புக்களை அல்லது ஏனைய சொத்துக்களை அறவிடும் பட்சத்தில் பணச்சபையானது அத்தகைய வெளிநாட்டு நாணய வைப்பீட்டாளர்களுக்கு அவ்வாறு கிடைக்கக் கூடியனவாக்கப்பட்ட வைப்புக்களின் அல்லது அவ்வாறு அறவிடப்பட்ட வைப்புக்களினதும் ஏனைய சொத்துக்களினதும் கொடுப்பனவு பற்றிக் கொள்ளும் வங்கிக்குப் பணிப்புக்கள் விடுப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், கொள்ளும் வங்கி அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

49ஊ. (1) இயைபான திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று செலுத்தத்தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழிலினது பெறுமதியை நிச்சயிக்கும் நோக்கத்திற்காக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், பணச்சபையின் அங்கீகாரத்துடன் தம்மால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரைக் கொண்டு அத்தகைய உரித்தாக்கப்பட்ட தொழிலின் கணக்காய்வொன்றை நடாத்துவித்தல் வேண்டும். கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும் உரித்தாக்கப்பட்ட தொழிலின் பெறுமானத்தைப் மதிப்பிடுதலும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அத்தகைய அறிக்கையைப் பணச்சபைக்கு அளித்தலும் வேண்டும்; பணச்சபையானது அறிக்கையைச் சீர்

தூக்கிப் பார்த்து, அவசியமாயின் அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் மேலதிகத் தகவலை, அல்லது விளக்கங்களைக் கொடுத்துதவுமாறு கணக்காய்வாளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(3) முதலாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் செலுத்தத்தவறும் வங்கியின் கணக்குகளைப் பரிசோதனை செய்வதுடன் ஐந்தொகையின் சரிபிழையை நிச்சயித்து பின்வருவனவற்றைக் கூறுகின்ற அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும் :—

(அ) அவருக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவலையும் விளக்கங்களையும் அவர் பெற்றிருந்தாரா பெற்றிருக்கவில்லையா என்பது ; அத்துடன்

(ஆ) அறிக்கையிற் குறிப்பிடு செய்யப்பட்ட ஐந்தொகையும் கணக்குகளும், செலுத்தத் தவறு வங்கியினது அலுவல்களின் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை வெளிக்காட்டும் வகையில் தகுந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பது; அத்துடன்

(இ) உரித்தாக்கப்பட்ட தொழிலின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதி.

(4) பணச்சபையானது கணக்காய்வாளரின் அறிக்கையைச் சீர்தூக்கிப் பார்த்தபின்னர், உரித்தாக்கப்பட்ட தொழிலின் பெறுமதியைச் செலுத்தத்தவறிய வங்கிக்கு அல்லது விடயத்திற்கேற்ப அதன் ஒழிப்போருக்கு அல்லது வழியுரிமையாளர்களுக்கு, அது குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலத்தினுள்ளும் செலுத்துமாறு கொள்ளும் வங்கியைப் பணித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழான ஒரு பணிப்பினைப் பின்பற்றிச் செலுத்தத்தவறும் வங்கிக்குச் செய்யப்படுதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கொடுப்பனவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளருக்குச் செய்யப்படுதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும், பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்பேரில் கொள்ளும் வங்கியினாற் செய்யப்படுதல் வேண்டும்.

பேணல் ஏற்பாடுகள்

49எ. இயைபான திகதியிலிருந்து —

(அ) செலுத்தத்தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழில் பற்றியனவையும், அல்லது அது தொடர்பானவையும், இயைபான திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று உள்ளவையும்

அல்லது பயனுள்ளவையும், செலுத்தத்தவறும் வங்கி அதற்கு ஒரு திறத்தவராக உள்ளவை யும் அல்லது செலுத்தத்தவறும் வங்கிக்குச் சாதகமாக உள்ளவையுமான எல்லா ஒப்பந் தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன் படிக்கைளும், அற்றோணித் தத்துவங்களும், சட்டப் பிரதிநிதித்துவ வழங்கல்களும், அத் துடன் எத்தகைய தன்மையினவுமான மற் றும் ஏனைய சாதனங்களும், கொள்ளும் வங்கி யினால் விடயத்திற்கேற்ப செய்துகொள்ளப் பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள், உறுதிகள், முறிகள், உடன்படிக்கைகள், அற் றோணித் தத்துவங்கள், சட்டப் பிரதிநிதித் துவ வழங்கல்கள் அல்லது மற்றும் வேறு சாதனங்கள் என்பனவாக இயைபான திகதி யிலிருந்து கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) செலுத்தத்தவறும் வங்கியினால் அல்லது அதற் கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், செலுத் தத்தவறும் வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழில் பற்றியவையும் அல்லது அதுதொடர் பானவையும், இயைபான திகதிக்கு நேர் முற் போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையும் எத் தகைய தன்மையினவையுமான எல்லா வழக் குகளும், வழக்கு நடவடிக்கைகளும், கொள் ளும் வங்கியினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் இருப்பனவாக இயை பான திகதியிலிருந்து கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படலாம் அல்லது குற்ற வழக்குத் தொடுக்கப்படலாம்;

(இ) இயைபான திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று விடயத்திற்கேற்ப கொள்ளும் வங்கியில் வழி யம் முனையப்படாதவர்களும் உரித்தாக்கப் பட்ட செலுத்தத்தவறும் வங்கியினது தொழி லின் அத்தகைய பாகத்துடன் சம்பந்தப்பட்ட வர்களுமான அத்தகைய வங்கியின் அத்த கைய எல்லா அலுவலர்களும் சேவையாளர் களும் அல்லது செலுத்தத்தவறும் வங்கியின் முழுத்தொழிலும் உரித்தாக்கப்பட்டுள்ள விடத்து, வங்கியின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் நட்டஈட்டுக் கொடுப்பன வுக்கு உரித்துடையவர்களாதல் வேண்டும்.

நட்டஈட்டுக் கொடுப்பனவு.

49எ. செலுத்தத்தவறும் வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் நட்டஈடு செலுத்தப்படுதற்கு உரித்துடையவராகவிருக்குமிடத்து, கொள்ளும் வங்கி, தொழில் ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தீர்மானம், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்தகைய அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு இருக்கக்கூடிய உரிமையைப் பாதிப்பதாகக் கருதப்படுதலுமாகாது.

தவறுகள்.

49ஒ. இப்பாகத்தின் ஏற்பாட்டை அல்லது இதன் கீழ் விதிக்கப்பட்ட நியதியை அல்லது நிபந்தனையை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

செலுத்தத் தவறும் வங்கி தொடர்பில் பிரிவு 12 (இ) ஏற்புடையதாதலாகாது.

49ஓ. பன்னிரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளில் உள்ளதெதுவும், செலுத்தத்தவறும் வங்கியின் வங்கித் தொழில் அல்லது அதன் பாகத்தைக் கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்குதல் தொடர்பாக ஏற்புடையதாதலாகாது.

பொருள்கோடல்.

49ஔ. இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய—

"உரித்தாக்கப்பட்ட தொழிலின் பெறுமதி" என்பது 49ஆ என்ற பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையின் பயனைக்கொண்டு கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டனவான செலுத்தத்தவறும் வங்கியின் பொறுப்புக்களைக் கழித்து 49ஊ என்ற பிரிவின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான அறவிடமுடியாச் சொத்துக்கள் நீங்கலாக அத்தகைய கட்டளையின் பயனைக் கொண்டு கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டனவான செலுத்தத்தவறும் வங்கியின் சொத்துக்களினது பெறுமதி என்று பொருளாகும்;

ஒரு கொள்ளும் வங்கி அல்லது செலுத்தத்தவறும் வங்கி தொடர்பாக "உரித்தாக்கப்பட்ட தொழில்" என்பது, 49ஆ என்னும் பிரிவின்கீழான கட்டளையினால் அத்தகைய கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதான செலுத்தத்தவறும் வங்கியின் வங்கித்தொழில் அல்லது அதன் பாகம் என்று பொருளாகும்.".

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் IX ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் IXஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும். முதன்மைச் சட்டவாக்கத்தில் IXஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்தல்.

"பாகம் IXஅ

உரிமம்பெற்ற விசேட வங்கிகள்

76அ. (1) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியிலும், அதன்பின்னரும் பணவைப்புக்களை ஏற்று, அத்தகைய பணத்தை முதலீடு செய்யும் அத்துடன் கடன் வழங்கும் தொழிலானது, ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாதவொரு தொகையிலான ஒப்புரவு மூலதனத்தைக் கொண்ட ஒரு கம்பெனியால் தவிரவும், இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் அத்தகைய நோக்கத்துக்கெனப் பணச்சபையினால் வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் தவிரவும், கொண்டு நடாத்தப்படுதல் ஆகாது; குறித்தசில நிறுவனங்களுக்கு உரிமமளித்தல்.

ஆயின், எவ்வாறாயினும், 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிதிக் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பெனி, தேசிய அரசுப் பேரவையினது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் (401 ஆம் அத்தியாயமான) தேசிய வீடமைப்புச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கட்டிடச் சங்கம் தொடர்பிலும், அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றாக உரிமமளிக்கப்பட்ட ஒரு கம்பெனிக்கும், முக்கியமாக இலாபமீட்டும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பு அல்லாததும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதுமான ஏதேனும் ஒழுங்கமைப்புக்கு உரிமமொன்றைப் பெறுவதற்கான தேவைப்பாடு ஏற்புடைத்தாதல் ஆகாது: ஆயின், அத்தகைய ஒழுங்கமைப்பு அதன் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே வைப்புகளை ஏற்பதாகவும், அத்தகைய வைப்புகளை ஏற்பதற்கும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய பணங்களை முதலீடு செய்வதற்கு அல்லது கடனாக வழங்குவதற்கு பணச் சபையிடமிருந்து அனுமதி பெற்றதாகவும் இருக்க வேண்டும்.

(2) அத்தகைய கம்பெனி இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியாகவிருக்குமிடத்து, அத்தகைய கம்பெனி 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாக இருந்தாலொழிய, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் உரிமம் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

(3) இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவினதும், 76ஆ என்னும் பிரிவினதும் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இச்சட்டத்துக்கான III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் திகதியன்று அல்லது அதன்பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிமமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவுக்கு முரணாக தொழில் கொண்டு நடாத்தும் ஏதேனும் கம்பெனி இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "கம்பெனி" என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 449 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இலங்கைக்கு வெளியே முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியை, அல்லது ஏதேனும் வெளிநாட்டில் ஏதேனும் நியதிச்சட்டத்தை, அரச பட்டயத்தை அல்லது உரிமைபோலிகளைப் பின்பற்றி அமைக்கப்பட்ட ஒரு கூட்டிணைப்புக் குழுவையும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கூட்டிணைப்புக் குழுவையும் உள்ளடக்கும். அத்துடன் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு தனியார் கம்பெனியை உள்ளடக்குதல் ஆகாது ; அத்துடன்

"ஒப்புரவு மூலதனம்" என்பது, இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உரிமத்துக்கான விண்ணப்பம்.

76ஆ. (1) பிரிவு 76அ என்பதன்கீழ் ஓர் உரிமத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணச்சபைக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பத்தில் எடுத்துக்கூறப்பட்ட விபரங்கள் விண்ணப்பக்காரரின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையும் செம்மையானவையும் என விண்ணப்பக்காரர் செய்யும் வெளிப்படுத்துகை ஒன்றை உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்.

(2) உரிமத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருவன இணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் :—

(அ) கம்பெனியின் அமைப்புப் புறவிதியினதும், அமைப்பு அக விதியினதும், அல்லது கம்பெனியின் யாப்பினதும் அல்லது அது சம்பந்தப்பட்ட வேறு ஏதேனும் ஆவணத்தினதும் பிரதியொன்று;

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியினால் அல்லது கூட்டிணைப்புக் குழுவினால் விண்ணப்பம் செய்யப்படும் விடயத்தில், இலங்கையில் அது தொழில் கொண்டு நடாத்தும்போது உறப்படும் அனைத்து கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும், மேவுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நிதிகளை மத்திய வங்கிகோரும்போது அத்தகைய கம்பெனி அல்லது கூட்டிணைப்புக் குழு ஏற்பாடு செய்தல் வேண்டும் என எடுத்துரைப்பதும், அதன் பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்பட்டதுமான எழுத்திலான ஒரு பொறுப்பேற்பும், அத்தகைய கம்பெனி எந்நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதோ அந்நாட்டின் பண அதிகாரியிடமிருந்து பெறப்படும் பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய தகவல் அடங்கிய ஓர் அறிக்கையும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று, கிடைக்கப்பெற்றதன்மீது பணச்சபை, அத்தகைய சபை அவசியமெனக் கருதுமிடத்து, அத்தகைய கம்பெனிக்கு உரிமமொன்று வழங்கப்படுதல் வேண்டுமா அல்லவா எனத் தீர்மானிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு ஆவணங்களை அல்லது விபரங்களைக் கோரித்தருமாறு விண்ணப்பக்காரரைத் தேவைப்படுத்தலாம்.

(4) தமது அறிவுக்கு எட்டியவரையில் ஏதேனும் முக்கிய விபரத்தில் பொய்யானதாகவுள்ள அல்லது பிழைவழியுய்ப்பதான தகவல் அடங்கிய விண்ணப்பமொன்றையும் வேறு ஆவணங்களையும் இப்பிரிவின்கீழ் சமர்ப்பிப்பவரான எவரேனும் விண்ணப்பக்காரர், இச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

உரிமம் வழங்கல்.

76இ. (1) பிரிவு 76ஆ என்பதன்கீழ் விண்ணப்பமொவ்வொன்று, கிடைக்கப்பெற்றதன்மீது, பணச்சபை, அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும், விபரங்களையும் சீர்தூக்கிப் பார்த்து—

(அ) விண்ணப்பகாரர் "வங்கி ;" என்னும் பதத்தை அல்லது அதிலிருந்து மருவிய அல்லது உருப்பெயர்ப்புபெற்ற சொற்களைப் பயன்படுத்த அனுமதிப்பது தோதானதென ;

(ஆ) உரிமத்தின் நியதி, நிபந்தனைகள் விண்ணப்பகாரினால் கடைப்பிடிக்கப்படுமென ; அத்துடன்

(இ) விண்ணப்பகாரருக்கு அத்தகைய உரிமத்தை வழங்குவது தேசிய பொருளாதார நலன்களுக்குப் பங்கமாக அமையாதென,

திருப்தியடைந்தபின்னர் அமைச்சரின் அங்கீகாரத்துடன் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் விண்ணப்பகாரருக்கு உரிமமொன்றை வழங்கலாம்.

(2) அத்தகைய கம்பெனி அதன் தொழிலை எந்த இடத்திலுள், இடங்களிலுள் அல்லது இடப்பரப்பினுள் கொண்டுநடாத்த வேண்டும் என்பதை உரிமம் குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கம்பெனி பணச்சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன் தவிர வேறு எதேனும் இடத்தில் தொழில் கொண்டு நடாத்துதல் ஆகாது.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் உரிமம் வழங்கப்பட்டிருக்கின்ற எதேனும் கம்பெனி இதனகத்துப் பின்னர் 'உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி' எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்

(4) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று, அது கொண்டுநடாத்த அனுமதிக்கப்படக்கூடிய தொழில்வகை பற்றி உரிமத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படக்கூடியவாறான மேற்கொண்டு மட்டுப்பாடுக்கு அமைவாக, இச்சட்டத்திற்கான IV ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொழில் வகைகளைக் கொண்டுநடாத்தலாம்.

(5) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் தொழிற்கொண்டுநடாத்தும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மீறிச் செயற்படவில்லை எனக் கருதப்படுதல் வேண்டும்.

76ஈ. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் உரிமம் வழங்கப்பட்டிருக்கின்ற ஒரு கம்பெனி, அதன் பெயரில் அல்லது அதன் விவரணத்தின் ஒரு பகுதியாக "வங்கி", "வங்கியாளர்" அல்லது "வங்கித்தொழில்" என்னும் சொற்களுள் எதனையும் எம்மொழியிலேனும் பயன்படுத்துதல் வேண்டும்: — வங்கி என்னும் பதத்தைப் பயன்படுத்தல்.

ஆயின், எவ்வாறாயினும் அதன் பெயரில் "வங்கி" "வங்கியாளர்" அல்லது "வங்கித்தொழில்" என்னும் சொல் எம்மொழியிலும் அடங்கியிராத இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனி அல்லது இச்சட்டத்துக்கான III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒரு நிறுவனம், இச்சொற்கள் அதன் பெயரில் அல்லது விவரணத்தில் விட்டுவிடப்பட்டிருப்பினும் கூட அதன் தொழிலைக் கொண்டுநடாத்தலாம்.

(2) கூட்டிணைக்கப்பட்ட ஒரு வாரத்தினுள் 76 ஆ என்னும் பிரிவின்கீழ் உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்கின்ற ஒரு கம்பெனிக்கு, விண்ணப்பம் சம்பந்தமான பணச்சபையின் தீர்மானம் கம்பெனிக்கு அறிவிக்கப்படும் நேரம் வரையில் இப்பிரிவில் உள்ள எதுவும் ஏற்புடைத்தாதல் ஆகாது.

76உ. பணச்சபையானது, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றாக உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் பற்றிய இடாப்பொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வைத்துப் பேணிவருதல் வேண்டும். — விசேட வங்கிகள் பற்றிய இடாப்பு.

76ஊ. (1) பிரிவு 76க என்பதன்கீழான அதன் தத்துவங்களுக்குப் பங்கமின்றி, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி எதுவும் — — உரிமத்தை இல்லாதாக்குதல்.

(அ) உரிமம் வழங்கப்பட்ட ஒன்பது மாதங்களினுள் தொழில் தொடங்கத் தவறியுள்ளதென அல்லது

(ஆ) அதனால் உறப்படும் தவிசுகள் எவற்றையும், அத்தகைய தவிசுகள் போமதியாக வந்ததன் மேல் செலுத்தத் தவறியுள்ளதென; அல்லது

(இ) அதற்கெதிராக நிவாரண மனு அல்லது வழக்கு கோப்பிடப்பட்டிருக்குமிடத்து ஏதேனும் வங்கி முறிவுச் சட்டத்தின்கீழ் அல்லது கடனாளிகளுக்கு நிவாரணமளிப்பதற்கு ஏற்பாடு செய்யும் அல்லது கடனாளிகள் தொடர்பான வேறேதேனும் சட்டத்தின்கீழ் அது தொடர்பில் கட்டுகாப்பாளர் அல்லது பெறுநர் ஒருவரை நியமித்துள்ளதென ; அல்லது

(ஈ) எத்தொழில் தொடர்பில் உரிமம் வழங்கப்பட்டதோ அத்தொழிலைக் கொண்டு நடாத்தா தொழிந்துள்ளதென ; அல்லது

(உ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களைத் தொடர்ச்சியாக மீறியுள்ளதென அல்லது அவற்றுக்கு முரணாகச் செயற்பட்டுள்ளதென ; அல்லது

(ஊ) அத்தகைய வங்கி எந்நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதோ அந்நாட்டின் தோதான அதிகாரியினால் அல்லது ஒழுங்குபடுத்தல் நாடியினால் அவ்வங்கி தொழிற்படுவதற்கான உரிமம் அல்லது அதிகாரம் இல்லாதாக்கப்பட்டுள்ளதென அல்லது மீளப் பெறப்பட்டுள்ளதென

பணச்சபை திருப்தியடைகின்றவிடத்து, பணச்சபையானது, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை அது இல்லாதாக்கும் என அறிவித்தல் கொடுக்கலாம் என்பதுடன், அத்தகைய அறிவித்தலை அத்தகைய வங்கிக்கு அனுப்புதலும் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழான இல்லாதாக்கல் அறிவித்தலுக்கு எதிராக, அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தை ஏன் அவ்வாறு இல்லாதாக்குதல் ஆகாது என்பதற்கான காரணங்களை எடுத்துக்கூறி, எழுத்திலான ஆட்சேபனைகளைப் பணச்சபைக்குச் சமர்ப்பிக்கலாம்.

(3) இல்லாதாக்கல் பற்றிய அறிவித்தல் திகதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவடைந்ததின்பின்னரும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பணச்சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சேபனைகளைச் சீர்தூக்கிப் பார்த்ததின்னரும், பணச்சபையானது, அத்தகைய அறிவித்தலை மீளப்பெற்று, வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கலாம் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய வங்கிக்கு அறிவித்தலும் வேண்டும்.

(4) உரிமமொன்று (3) ஆம் உட்பிரிவின்கீழ் இல்லாதாக்கப்படுதல் ஆனது —

(அ) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடு எதுவும் முன்வைக்கப்படாதவிடத்து, அத்தகைய மேன்முறையீட்டை முன்வைப்பதற்கான காலப்பகுதி முடிவடைந்தபின்னர், அல்லது

(ஆ) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் இல்லாதாக்குவதற்கு எதிரான மேன்முறையீடொன்று முன்வைக்கப்படுகின்றவிடத்து, இல்லாதாக்கல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிலைநாட்டப்பட்டபின்னர்,

பயனுறுவதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இல்லாதாக்கல் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழான ஏதேனும் இல்லாதாக்கல் தொடர்பிலான பணச்சபையின் முடிபினால் இன்னலுறும் ஆள் எவரும், அத்தகைய இல்லாதாக்கல் பற்றி சபையினால் அவருக்கு அறிவிக்கப்பட்டு பதினான்கு நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அத்தகைய முடிபுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(6) இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் சம்பந்தமாக அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படுகின்றவரையில், மீளாய்வு என்ற வகையாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக அந்த உறுப்புரையின்கீழ் ஆக்கப்படும் விதிகள், இப்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீட்டிற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) மேன்முறையீட்டு நீதிமன்றம், (5) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்படும் மேன்முறையீடொன்றில், அம்மேன்முறையீடு எம்முடிபுக்கு எதிராகச் செய்யப்படுகின்றதோ அம்முடிபை உறுதிப்படுத்தலாம், மீளாய்வு செய்யலாம், திரிபுபடுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம் என்பதுடன், நீதி நலன் தேவைப்படுத்தக் கூடியவாறான வேறு ஏதேனும் கட்டளையையும் ஆக்கலாம்.

(8) உரிமமொன்று இல்லாதாக்கப்படுகின்றவிடத்து, பணச்சபையானது, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் பெயரை, 76உ என்னும் பிரிவின்கீழ் பேணிவரப்படும் இடாப்பிலிருந்து அகற்றுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட

விசேட வங்கியை ஒடுக்குவதற்கான பணிப்புக்கள் உட்பட, அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கவும் செய்யலாம்.

(9) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியானது, கம்பெனியை ஒடுக்குவதற்கு (5) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒரு பணிப்புக்கு அத்தகைய பணிப்பு வழங்கப்பட்டு முப்பது நாட்களுக்குள் இணங்கியொழுகத் தவறுமிடத்து, நாணயச்சபையானது, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை ஒடுக்குவதற்கு வழக்குத் தொடுக்குமாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், 76த என்னும் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஒடுக்குதலுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றினால் பேணப்படவேண்டிய மூலதனம்.

76எ. (1) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று, எல்லா நேரங்களிலும் ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத ஒப்புரவு மூலதனமொன்றைப் பேணிவருதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று அதன் ஒப்புரவு மூலதனத்தை அல்லது நியதிச்சட்ட முறையான ஒதுக்குகளைப் நாணயச்சபையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் தவிர, குறைத்தல் அல்லது கேடுறச் செய்தல் ஆகாது.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக —

(அ) "ஒப்புரவு மூலதனம்" இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலுள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) "நியதிச்சட்ட முறையான ஒதுக்குகள்" என்பது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் அதற்கு வழங்கப்படும் ஒரு பணிப்பைப் பின்பற்றி உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியினால் பேணப்படும் எவையேனும் வங்கியின் நிதிகள் எனப் பொருளாகும்.

இச்சட்டத்தின் பாகம் V ஏற்புடைத்தாதல்.

76ஏ. இச்சட்டத்தின் V ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்னும் சொல்லமைப்பு அப்பாகத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி" என்னும் சொல்லமைப்பு இடம்பெற்றுள்ளது என்றாற்போன்று, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பணச்சபையின் பணிப்புக்கள்.

76ஒ. (1) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பணச்சபையானது, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் அல்லது ஏதேனும் வகுதியினவான உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் ஏதேனும் தொழில் அம்சம் நடாத்தப்படவேண்டிய முறை சம்பந்தமாக, குறிப்பாகப் பின்வருவன சம்பந்தமாக அத்தகைய வங்கிகளுக்குப் பணிப்புக்களை விடுக்கலாம்—

(அ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளினால் பணச்சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாருன அத்தகைய தொகைகளில் மூலதன நிறைவு விகிதம் ஒன்று பேணிவரப்படுதல்;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் ஒதுக்கு நிதியம் குறைக்கப்படுதல் அல்லது கேடுறுதல் உட்பட அந்நிதியம் பேணிவரப்படுதல்;

(இ) வைப்புக்கள் எந்நியதி, நிபந்தனைகளின்மீது ஏற்றுக்கொள்ளப்படலாமோ அந்நியதி, நிபந்தனைகளும், அத்தகைய வைப்புக்கள்மீது செலுத்தப்படற்பாலனவான ஆகக்கூடிய வட்டி வீதங்களும், வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆகக்கூடிய காலப்பகுதிகளும், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றில் ஓர் ஆளின் பெயரில் அல்லது பலரின் கணக்குகளில் வைப்பிலிடப்படக்கூடிய ஆகக்கூடிய தொகையும்;

(ஈ) ஏதேனும் கடன், கொடுகடன் வசதி அல்லது ஏதேனும் வகையான கடனுதவி அத்தகைய வங்கிகளினால் எந்நியதி, நிபந்தனைகளின்மீது வழங்கப்படலாமோ அந்நியதி, நிபந்தனைகளும், அத்தகைய கடன்கள், கொடுகடன் வசதிகள் அல்லது வேறு வகையான கடனுதவி மீது விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வட்டிவீதங்களும், அத்தகைய கடன், கொடுகடன் வசதி அல்லது வேறு வகையான கடனுதவி கொடுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய காலப்பகுதிகளும்;

(உ) தரகுப் பணங்கள், கழிவுகள், கட்டணங்கள் அல்லது வேறு எத்தகையளவுமான பெறுகைகள் அல்லது கொடுப்பனவுகள் என்ற வகையாக அத்தகைய வங்கிகளுக்குச் செலுத்தப்படக்கூடிய அல்லது அத்தகைய வங்கிகளினால் விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வீதங்கள்;

(ஊ) ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை மீது உத்தேச கொள்வனவுக்காரர் ஒருவரால் செலுத்தப்படவேண்டிய ஆகக்குறைந்த ஆரம்பக் கொடுப்பனவும், வெவ்வேறு வகுப்

பின்வரான கொடுக்கல் வாங்கல்களுக்கு வெவ்வேறு குறிப்பிட்ட ஆரம்பக் கொடுப்பனவுகளும்; அத்தகைய ஆகக்குறைந்த ஆரம்பக் கொடுப்பனவு அத்தகைய உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கு விடப்பட்ட பண்டங்களினது பெறுமதியின் நூற்றுவீததமாக வெளிப்படுத்தப்படலாம்;

(எ) அத்தகைய வங்கிகளினால் முதலீடுகள் எந்நியதி நிபந்தனைகளின்கீழ் செய்யப்படலாமோ அந்நியதி நிபந்தனைகள்;

(ஏ) அத்தகைய வங்கிகளினால் வழங்கப்படும் கடன்களுக்கு, கொடுகடன் வசதிகளுக்கு அல்லது வேறுவகையான கடனுதவிக்கும் செய்யப்படும் முதலீடுகளுக்கும் அனுமதிக்கத்தக்க ஆகக்கூடிய முதிர்வுக்காலங்களும், பல்வேறு வகையான கடன் வழங்கலுக்கு, கொடுகடன் மற்றும் முதலீட்டுத் தொழிற்பாடுகளுக்குத் தேவைப்படக்கூடிய அல்லது அனுமதிக்கப்படக்கூடிய பிணைப்பொறுப்பின் தன்மையும், தொகையும்;

(ஐ) அத்தகைய வங்கிகளினால் கணக்குப்புத்தகங்கள் அல்லது ஏனைய பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் பேணி வரப்படவேண்டிய படிவமும், முறையும்;

(ஒ) வழங்கப்பட்ட கடன்கள் காலந் தப்பியனவாக வந்திருப்பின், அத்தகைய கடன்கள் தொடர்பில் செலுத்தப்படாதுள்ள வட்டியை முழுமையாகவோ பகுதியளவிலோ, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் வருமானத்திலிருந்து விலக்கி வைத்தல்;

(ஓ) அத்தகைய வங்கிகளின் திரவச்சொத்துக்கள் அத்தகைய வங்கிகளின் மொத்தவைப்புப் பொறுப்புக்களுக்கு என்ன விகிதத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமோ அந்த ஆகக்குறைந்த விகிதம்;

(ஔ) நாணயச்சபையினால் தேவைப்படுத்தப்பட்டால், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகள் மத்திய வங்கியுடன் காசு மீதிகளைப் பேணிவருதலும், அத்தகைய காசு மீதிகள் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களுக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமோ அந்த ஆகக்குறைந்த விகிதாசாரமும்;

(க) வைப்புக்கள் "முதிர்வடையுமுன்னாக வைப்பீட்டாளர்களினால்" மீளப் பெறப்படுவது சம்பந்தமாக ஏற்புடையனவாகும் நிபந்தனைகள்;

(ஙா) அத்தகைய வங்கிகள் தமது கடன்களின் கொடுகடன் வசதிகளினது வேறுவகையான கடனுதவிகளின் அல்லது முதலீடுகளின் தொகையை அதிகரிப்பதைத் தடைசெய்தல்;

(ச) அத்தகைய வங்கிகளினால் வழங்கப்படும் அல்லது செய்யப்படும் எவையேனும் கடன்களின் முதலீடுகளின் அல்லது கடனுதவிகளின் தொகை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் எந்த விதத்தில் அதிகரிக்கப்படலாமோ அந்த விதத்திற்கான எல்லைகளை நிர்ணயித்தல்;

(ஞ) அவற்றினது கடன்களின், முதலீடுகளின் அல்லது கடனுதவியின் தொகையைக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளுக்குக் குறைக்குமாறு தேவைப்படுத்துதல்;

(ட) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிபொன்றில் பின்வருவனவற்றினால் வைத்திருக்கக்கூடிய பங்கு மூலதனத்தின் ஆகக்கூடிய நூற்றுவீதமாக—

(i) ஒரு கம்பெனியினால், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அல்லது ஒரு தனியாளினால் வைத்திருக்கப்படக்கூடியது;

(ii) (அ) ஒரு கம்பெனியினாலும் பின்வருவனவற்றுள் ஒன்றோ பலவோவற்றாலும், கூட்டு மொத்தமாக வைத்திருக்கக்கூடியது; அதாவது—

(அஅ) அதன் துணைநிலைக் கம்பெனி;

(ஆஆ) அதன் வைத்திருக்கைக் கம்பெனி;

(இஇ) அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனி பொன்று; அல்லது

(ஈஈ) அத்தகைய கம்பெனி அல்ல அதன் துணைநிலைக் கம்பெ அல்லது அதன் வைத்திருக்கை கம்பெனி அல்லது அதன் வை திருக்கைக் கம்பெனியின் து நிலைக் கம்பெனியொன்று கனி மான அக்கறை கொண்டுள் ஒரு கம்பெனி; அல்லது

(ஆ) ஒரு தனியாளினாலும், பின்வரும் ஒருவர் அ லது பலரினாலும், ஒன்றோ பலவோவற்ற லும் கூட்டுமொத்தமாக, வைத்திருக்கப்பட கூடியது. அதாவது :—

(அஅ) அவரது கிட்டிய உறவினர்;

(ஆஆ) அவர் அதில் கனிசமான அக்கறை கொண்டுள்ள அல்லது அவரது கிட்டிய உறவினர் அதில் கனிசமான அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி;

(இஇ) அத்தகைய கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியொன்று;

(ஈஈ) அத்தகைய கம்பெனியின் வைத்திருக் கைக் கம்பெனியொன்று;

(உஉ) அத்தகைய கம்பெனியினது வைத்திருக் கைக் கம்பெனியின் துணைநிலைக் கம் பெனியொன்று;

(ஊஊ) அத்தகைய கம்பெனி, அல்லது அதன் துணைநிலைக் கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனி கனிசமான அக்கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி; அல்லது

(எஎ) அத்தகைய தனியாள் அல்லது அவரது கிட்டிய உறவினர் கனிசமான அக் கறை கொண்டுள்ள ஒரு கம்பெனி தவிர்ந்த கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்று;

ஆயின், எவ்வாறாயினும், 76ஐ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடு களின் கீழ் அத்தகைய வங்கிமீது விதிக்கப்படும் அல் லது 76ஊ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் பங்குதாரர் ஒரு வர்மீது விதிக்கப்படும் ஒரு தேவைப்பாட்டின் மீதல் லாது, இச்சட்டத்தின் இப்பாகம் தொடங்கும் திகதி யன்று உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றில்

வைத்திருக்கப்படும் ஆளொருவரின் பங்குகளைக் குறைக்குமாறு இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் பணிப்பொன்று தேவைப்படுத்துதல் ஆகாது.

(ண) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பில் பேணிவரப்பட வேண்டிய விளிம்புகள் ;

(த) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கும், குத்தகை பெறுநருக்கும் இடையில் குத்தகை உடன்படிக்கைகள் தொடர்பிலான நியதி, நிபந்தனைகள் ;

(ந) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளினால் கொண்டுநடாத்தப்படக்கூடிய வகையான செயற்பாடுகள் மீது மட்டுப்பாடு.

(2) ஒராம் உட்பிரிவின், (இ), (ஈ) ஆகிய பந்திகளின் கீழான ஏதேனும் பணிப்பின்மூலம் நிர்ணயிக்கப்படும் ஆகக்குறைந்த வட்டிவீதங்கள், பணச்சபையினால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டால், அத்தகைய பணிப்புத் திகதிக்கு முன்னராக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்புத் தொடர்பில் அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் கடன், கொடுகடன் வசதி அல்லது வேறு ஏதேனும் கடனுதவி தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் பணிப்பில் உள்ள எதுவும்—

(அ) அத்தகைய ஏதேனும் வைப்பு அல்லது கடன், கொடுகடன் வசதி அல்லது வேறு கடனுதவி தொடர்பில் அத்தகைய பணிப்புத் திகதிக்கு முன்னர் திரண்ட ஏதேனும் வட்டிக்கு ஏற்புடையனவாதல் ஆகாது ; அல்லது

(ஆ) அத்தகைய பணிப்புத் திகதிக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்பு மீது அல்லது வழங்கப்பட்ட கடன், கொடுகடன் வசதி அல்லது கடனுதவிமீது செலுத்தப்படற்பாலதான வட்டி வீதத்தைக் குறைத்தலானது, விடயத்திற்கேற்ப அத்தகைய வைப்புக் கடன், கொடுகடன் வசதி அல்லது ஏனைய கடனுதவி தொடர்பிலான ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் மீறுகையாக அமையுமாயின், அத்தகைய குறைப்பைத் தேவைப்படுத்துதல் ஆகாது.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, பணச்சபையானது, அவசியமானவிடத்து, குறிப்பாக (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவா

மூன அத்தகைய விடயங்களில், குறிப்பிட்ட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கு பணிப்புக்களை வழங்கலாம்;

(4) பணச்சபையானது (1) ஆம் உட்பிரிவின் (ஒள) என்னும் பந்தியின் கீழ் வழங்கப்படும் ஒரு பணிப்பைப் பின்பற்றி, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றி னால் மத்திய வங்கியில் பேணிவரப்படும் ஏதேனும் காசு மீதி மீது, பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வீதத்தில், அதன் தறவுணியின் பேரில், வட்டி செலுத்தலாம்.

(5) இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒரு பணிப்புக்கு இணங்கியொழுகுவதாக செயற்படத்தவறுகின்ற அல் லது அத்தகைய பணிப்புக்கு முரணாகச் செயற்படுகின்ற உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று இச்சட்டத் தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று ஸ்திரமற்ற நடைமுறைகளைப் பின்பற்றுகின்றதென வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அபிப்பிராயப் படுமிடத்தான நடவடிக்கை முறை.

76. ஒ. (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் செய்யப்படும் ஓர் அறிக்கையின்மீது பணச்சபையா னது, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று—

(i) அதன் வைப்பாளர்களின் நலன்களுக்குப் பாதக மான ஸ்திரமற்ற அல்லது முறையற்ற நிதி சார் நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற தென; அல்லது

(ii) அதன் வைப்பிட்டாளர்களின் நலன்களுக்குப் பாதகமான ஒரு முறையில் அதன் தொழி லைக் கொண்டு நடாத்தும் சாத்தியம் உள்ள தென; அல்லது

(iii) இச்சட்டத்தின் இப்பாகத்தினதும் V ஆம் பாகத்தினதும் ஏற்பாடுகளினுள் எதனையும் மீறியுள்ளதென அல்லது அவற்றிற்கு இணங்கி யொழுகத் தவறியுள்ளதென,

அபிப்பிராயப்படுகின்றவிடத்து, பணச்சபையானது, அத்தகைய வங்கியை—

(அ) அத்தகைய ஏதேனும் நடைமுறையைப் பின் பற்றுதொழியுமாறு; அல்லது அத்தகைய ஏதேனும் மீறுகையைத் தவிர்க்குமாறு; அல் லது

(ஆ) இச்சட்டத்தின் இப்பாகத்தினதும், V ஆம் பாகத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகுமாறு; அல்லது

(இ) அத்தகைய நடைமுறையிலிருந்து அல்லது மீறு கையிலிருந்து விளையும் நிலைமைகளைச் சீராக்குவதற்கு அவசியமான நடவடிக்கையை எடுக்குமாறு; அல்லது

(ஈ) எவரேனும் ஆளினால் கம்பெனியில் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கப் பெறுமாறு ;

பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளையொன்று பற்றி திருப்தியுறாத ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி, அத்தகைய கட்டளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைய முன்னர், பணச்சபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் சபையானது அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்று பதினைந்து நாட்களுக்கு அதன் முடிபை வழங்குதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட பணிப்பொன்றுக்கு இணங்கி பொழுகும் வகையில், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று அத்தகைய வங்கியில் பங்குகள் வைத்திருக்கும் ஆளொருவரை, அத்தகைய வங்கியில், அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையை, அத்தகைய பங்குகள் அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின் இப்பாகம் தொடங்கும் திகதிக்கு முன்னர் கொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள், குறைக்குமாறு பணிக்கலாம்; அத்தகைய ஆள் அத்தகைய பணிப்புக்கு இணங்கி பொழுகுவது அவரது கடமையாதல் வேண்டும்.

(4) விடயத்திற்கேற்ப (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3)ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு அல்லது அவருக்கு வழங்கப்படும் பணிப்புக்கு இணங்கிபொழுகத்தவறும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி அல்லது பங்குதாரர் ஒருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பதினெட்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் புத்தகங்களையும் கணக்குகளையும் பரிசோதனையிடுவதற்கு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குள்ள தத்துவம்.

76. (ஏள) (1) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் புத்தகங்களையும் கணக்குகளையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் எந்த நேரத்திலும் பரிசோதனையிடலாம் அல்லது அவரது பகுதியைச் சேர்ந்த எவரேனும் அலுவலருக்கு பரிசோனையிட அதிகாரமளிக்கலாம்.

(2) அத்தகைய ஏதேனும் பரிசோதனை பற்றிய அறிக்கை, அத்தகைய பரிசோதனை முடிவடைந்தவுடன் விரைவில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் மத்திய வங்கியின் ஆளுநருக்குக் கொடுத்தவைப்படுதல் வேண்டும். வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அத்தகைய பரிசோதனைச் செலவுகளை உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியிடமிருந்து அறவிடலாம்.

(3) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் —

(அ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் எவரேனும் பணிப்பாளருக்கு முகாமையாளருக்கு, செயலாளருக்கு ஊழியருக்கு அல்லது கணக்காய்வாளருக்கு சத்தியக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க, சத்தியங்களை அல்லது உறுதியுரைகளை எடுத்தோதுவித்தல்;

(ஆ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை, செயலாளரை, ஊழியரை அல்லது கணக்காய்வாளரை, வங்கி அலுவல்கள் தொடர்பில், இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கத்திற்காக நிச்சயிப்பதற்கு அவசியமானவையென வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் கருதக்கூடியவரான அத்தகைய அனைத்துத் தகவலையும் கொடுத்தலுமாறு தேவைப்படுத்துதல்;

(இ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை, செயலாளரை, ஊழியரை அல்லது கணக்காய்வாளரை, வங்கி அலுவல்கள் தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவல் அடங்கியிருக்கும் சாத்தியம் கொண்டனவும் அவரது உடைமையில் அல்லது கட்டுக்காப்பில் உள்ளனவுமான எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது ஆவணங்களை பார்வையிடுவதற்குக் காண்பிக்குமாறு தேவைப்படுத்துதல் ;

(ஈ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றினால் பிறழ்முகாமைத்துவம் புரியப்படுவது பற்றிய சான்று காணப்படும் ஏதேனும் விடயத்தில் அத்தகைய வங்கியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது செயலாளரை, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுவதற்கென அத்தகைய வங்கியின் கணக்குகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்துதல் அல்லது அத்தகைய கணக்காய்வாளருக்கு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அல்லது அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு, அல்லது அத்தகைய புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது ஆவணங்களைக் காண்பிக்குமாறும், அத்தகைய கட்டணங்களை செலுத்துமாறும் அவ்வங்கியைத் தேவைப்படுத்துதல்,

அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், செயலாளரும், ஊழியரும் அல்லது எவரேனும் கணக்காய்வாளர் இப்பிரிவின்கீழ் அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுதலும், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் அவ்வாறு செய்யத் தேவைப்படுத்தப்படும்போதெல்லாம் அதன் காசு மீதிகளும், சொத்துக்களும் பொறுப்புக்களும் உட்பட அந்த உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் அனைத்து புத்தகங்களையும் பதிவேடுகளையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் கணக்காய்வாளர் பார்வையிட வசதி செய்து கொடுத்தலும் அப்பணிப்பாளரின், முகாமையாளரின், செயலாளரின், ஊழியரின் அல்லது கணக்காய்வாளரின் கடமையாதல் வேண்டும்.

(5) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றினது அலுவல்களின் உண்மையான நிலை பற்றி நிச்சயிப்பதும், அத்தகைய வங்கி அதன் தற்போதைய அல்லது எதிர்கால வைப்பிட்டாளர்களுக்குப் பாதகமானவொரு முறையில் தொழில் கொண்டுநடாத்துகின்றதா என நிச்சயிப்பதும் அவசியமானது எனக் கருதுகின்றவிடத்து, உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி தொடர்பிலான தகவலை வைத்திருக்கின்றார் எனக்கருதும் எவரேனும் ஆளை,

எழுத்திலான அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விடயங்கள் பற்றி அந்த ஆளை விசாரிக்கும் வண்ணம், அத்தகைய தகவலை தமக்கு அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் கணக்காய்வாளருக்குக் கொடுத்துதவுமாறு, அல்லது அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும், அத்தகைய திகதியிலும், நேரத்திலும் தன்முன்னிலையில் அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் முன்னிலையில் நேரடியாக வருகை தருமாறு தேவைப்படுத்தலாம்.

(6) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியினது அலுவல்களின் உண்மையான நிலைமை பற்றி நிச்சயிக்கும் நோக்கத்துக்காக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், (5) ஆம் உட்பிரிவின்கீழான ஒரு விசாரணையின் நோக்கங்களுக்கு அவசியமானதென எண்ணினால், இசைவான நேரத்தில் —

(அ) விசாரணைக்குட்படுத்தப்பட்ட உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியினது வைத்திருக்கைக் கம்பெனியொன்றாக, துணை நிலைக் கம்பெனியொன்றாக இருக்கின்ற அல்லது இருந்திருக்கின்ற ;

(ஆ) அந்த உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியினது வைத்திருக்கைக் கம்பெனியொன்றின் துணை நிலைக் கம்பெனியொன்றாக இருக்கின்ற அல்லது இருந்திருக்கின்ற;

(இ) அந்த உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் இணைந்த கம்பெனியொன்றாக இருக்கின்ற அல்லது இருந்திருக்கின்ற;

ஏதேனும் கம்பெனியின் தொழில் பற்றியும் விசாரிக்கலாம் என்பதுடன், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களுள் எதனையும் அத்தகைய ஏதேனும் கம்பெனி தொடர்பில் பிரயோகிக்கவும் செய்யலாம்.

இவ்வுட்பிரிவில் "இணைந்த கம்பெனி" என்பது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, எக்கம்பெனியில், அந்த உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்குமூலதனத்தில் இருபது சதவீத அல்லது அதற்கு மேற்பட்ட ஆனால் ஐம்பது சதவீதத்திற்குக் குறைவான சாதாரண பங்குகளை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனியொன்று எனப் பொருள்படும்.

(7) ஐந்தாம் அல்லது (6) ஆம் உட்பிரிவுகளின்கீழ் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் அவர்மீது சுமத்தப்படும் ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஒடுக்குதல் அல்லது குலைத்தல்.

76க (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் அலுவல்களைத் தாமாகவே அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மூலமாக பரிசோதனை செய்தபின்னர் அல்லது வங்கியிலிருந்து பெறப்பட்ட தகவல் மீது அவ்வங்கி கடனிறுக்க வகையற்றதென அல்லது அதன் வைப்பீட்டாளர்களின் கோரிக்கைகளைச் சமாளிக்க இயலாது வரும் சாத்தியம் உள்ளதென அல்லது அது தொழிலைத் தொடருவதால் அதன் வைப்பீட்டாளருக்கு அல்லது அதன் கடன் தருநர்களுக்கு நட்டம் ஏற்படும் சாத்தியம் உள்ளதென திருப்தியடையுமிடத்து, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அதற்கிணங்க அறிக்கையொன்றை, பணச்சபைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கென மத்திய வங்கி ஆளுநருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய சபை, நிகழ்வுகளையும், சூழ்நிலைகளையும் மீளாய்வு செய்வதன் மேல், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென அபிப்பிராயப்பட்டால், பணச்சபை, தொழிலை இடைநிறுத்துமாறு வங்கியைப் பணிக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம் என்பதுடன், கம்பெனி தொழில் தொடருவதைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடிய அனைத்து நடவடிக்கையையும் எடுக்குமாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு பணிப்பு வழங்கவும் செய்யலாம். கம்பெனி தொழில் தொடருவதைத் தடுக்கும் வண்ணம் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அத்தகைய நடவடிக்கை எடுப்பதற்கு எதிராக முட்டுக்கட்டையிடும் ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) வேறு ஏதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், (1)ஆம் உட்பிரிவின் கீழ் நன்நோக்கத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை மீளாய்வு செய்யப்பெறும் அல்லது ஒழிக்கப்பெறும் நோக்கத்துக்காக அல்லது அத்தகைய கட்டளையின் காரணமாக உறப்படும் அல்லது உறப்படக்கூடிய சாத்தியம் கொண்ட அல்லது உறப்படும் எனச் சார்த்தப்பட்ட ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பில், வழக்கு அல்லது நடவடிக்கை எதுவும் ஏதேனும் நீதிமன்றத்தில் கொடுக்கப்படலாகாது.

(3) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பணச்சபையினால் ஆக்கப்படும் கட்டளையொன்று, அது ஆக்கப்பட்ட திகதியிலிருந்து அறுபது நாட் காலப்பகுதி முடிவடைவதன்மேல் பயனுறுதொழிதல் வேண்டும் என்பதுடன், செயல்முறைக்குகந்தளவு விரைவிலும் எச்சந்தர்ப்பத்திலும் அத்தகைய காலப்பகுதி முடிவடையு முன்னராகவும் பின்வருமாறு செய்தல் பணச்சபையின் கடமையாதல் வேண்டும்—

(அ) ஒன்றில் நிபந்தனையின்றி அல்லது பொது மக்கள் நலன்கருதி அல்லது வங்கி வைப்பாளர்களினதும் ஏனைய கடன்கருநர்களினதும் நலன்கருதி பணச்சபை அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைக்கு அமைவாக, வங்கி, தொழிலை மீளத்தொடங்க அனுமதிக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல்; அல்லது

(ஆ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குகை —

(i) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 449 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட ஒரு கம்பெனியாக இருக்குமிடத்து, அத்தகைய கம்பெனிகள் சட்டத்தின் IX ஆம் பாகத்தின் (347 ஆம் பிரிவு தவிர்ந்த) ஏற்பாடுகளுக்கிணங்க நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் கம்பெனியை ஒடுக்குதற்கு விண்ணப்பிக்குமாறு அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர் சபையைப் பணித்தல்;

(ii) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனமாக இருக்கின்றவிடத்து, அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம் எந்த அமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டிருக்கின்றதோ அந்த அமைச்சர், அத்தகைய கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்கு 1971 ஆம் ஆண்டின்

38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அவசியமான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க இயலச்செய்வதற்கென அவருக்கு அது பற்றி அறிவித்தல்;

(iii) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியாக அல்லது வேறு குழுவாக இருக்குமிடத்து, அதன் தொழில் அலுவல்கள் இச் சட்டத்தின் 70 ஆம் பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அப்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஒடுக்கல் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 66ஆம் பிரிவின் ஏற்பாடுகள், (3)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட ஒரு கம்பெனியின் ஒடுக்குதல் நடவடிக்கையில் உரிமைக் கோரிக்கை முன்னுரிமைகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

தொடர்பு பட்ட விடயங்கள் தொடர்பில் பணிப்புக்கள் வழங்குவதற்கு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குள்ள தத்துவம்.

76ஐ. (1) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் அமைப்புப் புறவிதிகளிலும் அமைப்பு அகவிதிகளிலும் முரணாக எது எப்படியிருப்பினும், 76ஐ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் பணச் சபையினால் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றவிடத்து, பணச்சபையானது —

(அ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை வேறோர் உரிமமளிக்கப்பட்ட வங்கியுடன் அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்துடன் அத்தகைய மற்ற உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் அல்லது நிறுவனத்தின் சம்மதத்துடன் இணைப்பதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம்;

(ஆ) அதன் மூலதனத்தை அதிகரித்து புதிய பங்குதாரர்களை ஏற்பாடு செய்வதன்மூலமும் அதன் பணிப்பாளர் சபையை மீளமைப்பதன் மூலமும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை மீள ஒழுங்குபடுத்தலாம்; அல்லது

(இ) தொழிலின் வளமற்ற பிரிவுகளை மூடிவிடுதலும், முகாமைத்துவத்தை மீள ஒழுங்குபடுத்தலும் உட்பட வைப்பீட்டாளர்களின் நலனுக்குகந்தது என அது கருதும் அத்தகைய ஏதேனும் முறையில் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை மீளமைக்கலாம்;

(ஈ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின் பங்குதாரர் எவரையும், அவருக்குச் சொந்தமான பங்குகளின் சொத்தாண்மையை உரிமை துறக்குமாறு அல்லது பணச் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் ஆளுக்கு, அத்தகைய ஆள் பின்வருமாறு திர்மானிக்கப்படும் நட்டஈட்டைச் செலுத்துவதன்மீது, கைமாற்றுமாறு பணிக்கலாம் :—

(i) அத்தகைய பங்குகள் விலை கோரப்பட்டனவாக இருக்குமிடத்து, அவற்றின் சந்தைப் பெறுமதிப்படி; அல்லது

(ii) அத்தகைய பங்குகள் விலைகோரப்பட்டனவாக இல்லாதவிடத்து, பணச் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் விலைமதிப்பீட்டாளர் ஒருவரினால் திர்மானிக்கப்படும் ஒரு விலைப்படி,

(2) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்படும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறும் பங்குதாரர் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு, "ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியில்", என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு, "ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 79அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— சட்டவாக்கத்தில் 79அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"தவறுகளை இணக்கித் தீர்த்தல்.

79அ. (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், பணச் சபையின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்ட சந்தர்ப்பங்களை கவனத்திற் கொண்டு, அத்தகைய தவறை இருநூற்றியைம்பது ரூபாவை விஞ்சாதவொரு தொகைக்கு இணங்கித் தீர்க்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் ஏதேனும் தவறை இணங்கித் தீர்த்ததலானது குற்றஞ்சாட்டப்பட்டவரின் விடுவிப்பொன்றுகப் பயனுடையதாதல் வேண்டும்.".

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு அப்பிரிவில் "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்னும் சொற்கள் தோன்றும் இடங்களிலெல்லாம், "விடயத்திற்கேற்ப உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்.

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 81அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 81அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"II ஆம் IV ஆம் அட்டவணைகள் தீர்மானம் மூலம் திருத்தப்பட வேண்டும்.

81அ. இச்சட்டத்திற்கான II ஆம், IV ஆம் அட்டவணைகளை அதற்கென நிறைவேற்றப்படும் தீர்மானம் மூலம் திருத்தப், பாராளுமன்றம் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.".

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 82அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 82அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"இச்சட்டம் ஏனைய சட்டங்களிலும் மேலோங்கி நிற்றல்.

82அ. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளே மேலோங்கி நிற்றல்வேண்டும்.".

38. முதனமைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 83அ, 83ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 83அ 83 ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"தகை அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டம் ஏற்புடைத்தாதல் ஆகாது.

83அ. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றுக்கு (99 ஆம் அத்தியாயமான) தகை அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல் ஆகாது என்பதுடன், அத்தகைய வங்கி பணச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தனை நிபந்தனைகளுக்கு அமைவாக தகை அடைவு பிடிப்போர் தொழிலைக் கொண்டுநடாத்தலாம்.

வர்த்தக இலக்களிக்கப்பட்ட கம்பெனியாகக் கருதப்படல்.

83ஆ. உரிமமளிக்கப்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றாக இச்சட்டத்தின் 5ஆம் பிரிவின்கீழ் உரிமம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதான, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதான கம்பனி ஒன்று, அத்தகைய உரிமம் வழங்கப்பெற்ற திகதியிலிருந்து, 1974 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, கம்பெனிகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் நோக்கங்களுக்காக விலக்களிக்கபெற்ற கம்பெனியொன்றாகக் கருதப்படல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "மூலதன நிதிகள்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்குவதன் மூலமும், அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்;

"மூலதன நிதிகள்" என்பது—

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் விடயத்தில், 20 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான ஒப்புரவு மூலதனமும், ஒதுக்கு நிதியமும் எனப்பொருளாகும் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் தவிர்ந்த ஒதுக்குகளையும் உள்ளடக்கும்;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் விடயத்தில், ஒப்புரவு மூலமும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி தவிர்ந்த அத்தகைய வங்கியின் ஒதுக்குகளும் எனப் பொருளாகும்;". அத்துடன்

(2) "வர்த்தக வங்கியொன்றின் தலைமை அலுவலகம்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

"நிதிக் கம்பெனி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நிதிக் கம்பெனியொன்றாக பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனி எனப் பொருளாகும்.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 11 ஆம் அட்டவணையைத் திருத்துதல்.

40. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 11ஆம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்த அட்டவணைக்கான (இ) என்னும் விடயப்பொருளுக்குப் பதிலாக பின்வரும் விடயப்பொருளை இடுவதன் மூலமும் :—

"(இ) நிதிச்சேவைகளை ஏற்பாடுசெய்வதுடன் தொடர்புபட்ட ஏதேனும் தொழில் தொடர்பில், அரசாங்கத்துக்காக அல்லது உள்ளூரதிகாரசபைகளுக்காக அல்லது அவற்றின் சார்பில் அல்லது எவரேனும் ஆளுக்காக அல்லது ஆள் சார்பில் முகவராண்மை பணியைக் கொண்டுநடாத்துதல் அல்லது ஏதேனும் நிதி நிறுவனத்துக்கான முகாமைத்துவ முகவராகச் செயற்படுதல்;";

(2) அந்த அட்டவணையில் (ஒ) என்னும் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :—

"(ஒ) ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராகப் பணியாற்றுதல் உட்பட நம்பிக்கைப்பொறுப்புக்களைப் பொறுப்பேற்றலும், நிறைவேற்றுதலும்;";

(3) பந்தி (க) வில் "கம்பெனியின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோளை கொண்டுள்ள வேறு ஏதேனும் கம்பெனியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேறு ஏதேனும் கம்பெனியின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அந்த அட்டவணையின் (த) என்னும் விடயத்துக்குப் பதிலாக பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலமும் :—

"(த) முகாமைத்துவ உசாத்துணைச் சேவைகளையும், ஏனைய தொழினுட்ப ஆதாரச்சேவைகளையும் ஏற்பாடு செய்தல்;";

(5) பந்தி (ப) வில் "தொழிற்சாலைக் குத்தகைச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொழிற்சாலை தொழில் குத்தகைச்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(6) அந்த அட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய விடயப் பொருட்களைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ய) தகை அடைவு பிடிக்கும் தொழில்;

(ர) நிதிச் சேவைகள் தொழில் முயற்சியொன்றை நடாத்துவதற்காக அல்லது அதன் தொழிலை நடாத்துவதற்கு ஆதாரச்சேவைகளை ஏற்பாடுசெய்யும் ஏதேனும் தொழில் முயற்சியை நடாத்துவதற்காக எவரேனும் ஆளுடன் அல்லது கம்பனியுடன் கூட்டுமுயற்சியொன்றுக்கு ஒழுங்கேற்பாடுகளைச் செய்துகொள்ளுதல்.

(அஅ) பணச்சபை உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கக்கூடிய வேறு ஏதேனும் தொழில்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்குப் புதிய அட்டவணைகளைச் சேர்த்தல்.

41. பின்வரும் புதிய அட்டவணைகள் II ஆம் அட்டவணையை உடனடுத்து இத்தால் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன.

"அட்டவணை III (பி 76 அ (3))

1. 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி.

2. 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

3. 1975 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு, முதலீட்டு வங்கி.

4. 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி.

அட்டவணை IV (பிரிவு 76 இ (4))

(அ) இச்சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்துவது நீங்கலாக, கால மற்றும் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும், வைப்புக்களையும், சேமிப்புக்களையும், ஏனைய ஒத்த கணக்குகளையும் திறத்தலும், பேணுதலும், முகாமை செய்தலும் ;

(ஆ) கைத்தொழிலில், கமத்தொழிலில் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடவுள்ள ஏதேனும் தொழில் முயற்சிக்கு அல்லது வேறு ஏதேனும் தொழில் முயற்சிக்கு கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல் அல்லது கடன்களை அல்லது முற்பணங்களை வழங்குவதில் வேறு நிதி நிறுவனங்களுடன் பங்குபற்றுதல்;

(இ) கைத்தொழில், கமத்தொழில் வர்த்தக தொழில் முயற்சிகளுக்கும் ஏனைய தொழில் முயற்சிகளுக்கும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் எவையேனும் கடன்களுக்கு அல்லது முற்பணங்களுக்கு மீள நிதி வசதியளித்தல் என்றவகையாக கடன்களையும், முற்பணங்களையும் வழங்குதல் ;

(ஈ) பின்வருவனவற்றிற்காக கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல் —

(i) வாழ்மனையொன்றை நிருமாணிப்பதற்காக ஏதேனும் காணியை கொள்வனவு செய்தல் அல்லது குத்தகைக்கு எடுத்தல் ;

(ii) வாழ்மனையொன்றை நிருமாணித்தல், பழுதுபார்த்தல், புதுப்பித்தல் அல்லது விசாலித்தல் ;

(iii) வாழ்மனையொன்றை கொள்வனவு செய்தல் அல்லது குத்தகைக்கு எடுத்தல் ;

(vi) மேற்கூறிய (i), (ii), (iii) இல் கூறப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்கு இடைநேர்விளைவான, துணைநிலையான அல்லது இணைந்த ஏதேனும் நோக்கம்; அல்லது

(v) (i), (ii), (iii), (iv) இல் கூறப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காக ஏலவே உறப்பட்ட ஏதேனும் தவிசை ஒழித்துக்கட்டல்.

(உ) கைத்தொழில், கமத்தொழில். வர்த்தக தொழில் முயற்சிகளுக்கு அல்லது ஏனைய தொழில் முயற்சிகளுக்கு குறுகியகாலக் கடன்களையும், முற்பணங்களையும் ஏற்பாடு செய்தலும், நிறுவனஞ்சார் பணச்சந்தையில் நிதிவசதியளித்தல் அல்லது கடன் வழங்குதல் ;

(ஊ) ஏதேனும் பகிரங்க அல்லது தனிப்பட்ட கம்பெனிக்காக, கூட்டுத்தாபனத்திற்காக அல்லது கழகத்திற்காக அல்லது அரசாங்கத்திற்காக அல்லது ஏதேனும் உள்ளூராதிகாரசபைக்காக, அதன் சொந்த மூலவளங்களிலிருந்து அல்லது ஏனைய வங்கிகளிலிருந்தும் நிதி நிறுவனங்களிலிருந்தும் ஒன்றில் ரூபாவில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை ஒழுங்குபடுத்தலும், கடன்களுக்கு உத்தரவாதமளித்தலும், முகாமை செய்தலும், ஒன்றிணைத்தலும் ;

(எ) ஏனைய நிதி நிறுவனங்களுடனான கடன்களில், ஒப்புரவுகளில், பொறுப்பேற்பு ஒழுங்குகளில், உத்தரவாதங்களில் பங்குபற்றுதல் ;

(ஏ) நிதி நிறுவனங்களுக்கான முழுமொத்த கடன் வழங்கலைப் பொறுப்பேற்றல்;

(ஐ) ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளுக்கு அல்லது ஏனைய தொழில் முயற்சிகளுக்கும் உள்ளூரிலும், வெளியூரிலும் மூலதனத்தை திரட்டுவதில் பங்குபற்றுதல் உட்பட, அத்தகைய தொழில் முயற்சிகளை மேம்படுத்தலும், அத்துடன் மேம்படுத்துவதில், தாபிப்பதில், விசாலிப்பதில், நவீனமயப்படுத்துவதில் உதவுதலும் ;

(ஒ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக முயற்சிகளினால் அல்லது ஏனைய தொழில் முயற்சிகளினால் நிதி நிறுவனங்களிலிருந்து திரட்டப்படும் அல்லது திரட்டப்படவுள்ள கடன்களுக்கு உத்தரவாதமளித்தலும் அத்தகைய கடன்களுக்கு உத்தரவாதமளிப்பதில் ஏனைய நிதி நிறுவனங்களுடன் பங்குபற்றுதலும் ;

(ஓ) ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளிருந்தும், ஏனைய தொழில் முயற்சிகளிலிருந்தும் வருமதியான ஒத்திவைக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உத்தரவாதமளித்தல் ;

(ஔ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளினதும், ஏனைய தொழில் முயற்சிகளினதும் மூலதன வழங்கல்களைப் பொறுப்பேற்பதனால் எழுகின்ற நிதி நிறுவனங்களின் கடப்பாடுகளுக்கு உத்தரவாதமளித்தல் ;

(க) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில்முயற்சிகளினதும் ஏனைய தொழில் முயற்சிகளினதும் ஒப்புரவில் பங்குபற்றுதலும், அத்தகைய எவையேனும் தொழில் முயற்சிகளின் பங்குகளின் முறிகளின் அல்லது தொகுதிக்கடன்களின் வழங்கலுக்கு ஒப்பப் பணமளித்தல் அல்லது அவற்றைக் கொள்வனவு செய்தல் அல்லது பொறுப்பேற்றல், அத்தகைய பங்குத்தொகுதிகளை, களஞ்சியங்களை, முறிகளை, தொகுதிக்கடன்களை விற்றலும் கையாளுதலும் ;

(ங) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளுக்கான அல்லது ஏனைய தொழில் முயற்சிகளுக்கான வங்கிக்கடன்களின் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் அக்கடன் அத்தகைய ஏதேனும் தொழில் முயற்சிகளினால் வழங்கப்படும் முறிகளுக்கான அல்லது தொகுதிக்கடன்களுக்கான அதன் ஒப்பப்பணங்களை ஒப்புரவு மூலதனமாக மாற்றுதல் ;

(ச) சேமிப்புக்களை திரட்டுதலும், மேம்படுத்தலும், அந்நோக்கத்துக்காக சேமிப்புச் சான்றிதழ்களையும், ஏனைய முறிகளையும், சான்றிதழ்களையும் சாதனங்களையும் வழங்குதலும், கையாளுதலும்;

(ஞ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளினதும், ஏனைய தொழில் முயற்சிகளினதும் நாணய மாற்றுண்டியல்களை, வாக்குறுதிப்பத்திரங்களை, கூப்பன்களை, வரைவுகளை, தொகுதிக் கடன்களை, சான்றிதழ்களை, பங்குச் சான்றிதழ் தொகுதிகளை, ஏனைய சாதனங்களை, பிணையங்களை, அவை கைமாற்றத்தக்கனவாகவிருப்பினுஞ்சரி அல்லது உரிபெயர்தக்கனவாகவிருப்பினுஞ் சரி, ஏற்றுக்கொள்ளலும், அவற்றுக்கு கழிவு வழங்கலும், மீள்கழிவு வழங்கலும், அவற்றைக் கொள்வனவு செய்தலும், விற்பனை செய்தலும், கையாளுதலும் ;

(ட) விசேட நிதிசார் உற்பத்திப்பொருட்களையும், சேவைகளையும், பொறிகளையும், சாதனங்களையும் மேம்படுத்தலும், அறிமுகப்படுத்தலும் ;

(ண) பணத்தாருத் தொழிலையும், விளிம்பு வியாபார வசதிகளையும் ஏற்பாடு செய்தல் ;

(த) மூலதனச் சந்தைகளையும், பணச்சந்தைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல் ;

(ந) கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமையாளர்களாகச் செயலாற்றுவது உட்பட நம்பிக்கைப் பொறுப்புப் பணிகளைப் பொறுப்பேற்றல் ;

(ப) அரசாங்கத்திடமிருந்து அல்லது அரசாங்கத்தின் சார்பில் செயலாற்றும் முகவராண்மைகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுதலும், வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலும் ;

(ர) ஏதேனும் நியதிச் சட்டமுறையான குழுவுக்காக, கூட்டுத்தாபனத்திற்காக அல்லது வேறு நிறுவனத்திற்காக முகவர்களாகச் செயலாற்றுதலும், அவற்றின் நிதிகளை நிருவகித்தலும் ;

(ல) வங்கியினால் வழங்கப்படும் ஏதேனும் கடனில் வங்கியின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக ஒரு வாடிக்கையாளரின் ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக பொறுப்புமுயற்சியையும் ஏனைய பொறுப்பு முயற்சியையும் முகாமை செய்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் அல்லது முகாமை செய்வதில், மேற்பார்வை செய்வதில், அல்லது கட்டுப்படுத்தலில் பங்குபற்றல்;

(வ) வர்த்தக அடிப்படையில் ஒழுங்கமைப்புக்களில் ஏலவேயுள்ள தனிகங்களைக் கொள்வனவு செய்தலும், வட்டி மாற்று வசதிகளையும், வட்டித் தீர்ப்பு வசதிகளையும் ஏற்பாடு செய்தலும் ;

(ழ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில்முயற்சிகளுக்கும், ஏனைய தொழில் முயற்சிகளுக்கும் தொழில்நுட்ப, நிதி, முகாமைத்துவ அல்லது நிருவாக அலோசனைகள், உதவிகள் போன்ற அத்தகைய சேவைகளை ஏற்பாடு செய்தலும் ;

(ள) மீள் மீளமைப்பு, ஒன்று சேர்ப்புகள், மீள் நிருமாணங்கள், பொறுப்புகள், ஒன்றிணைவுகள் ஆகியவற்றில் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளுக்கும், ஏனைய தொழில் முயற்சிகளுக்கும் உதவுதல்;

(அஅ) அமைப்பு முறை முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்றல் ;

(ஆஆ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் துறைகளிலும் ஏனைய துறைகளிலும் முன்னோடிக் கருத்திட்டங்கள் உட்பட அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றல ;

(இஇ) பொற்கட்டிகளையும், நாணயங்களையும் கொள்வனவு செய்தலும், விற்பனை செய்தலும், கையாளுதலும், பரிவர்த்தனைத் தொழிற்பாடுகளில் ஈடுபடுதலும் ;

(ஈஈ) நாணயக் கடிதங்களையும், புழக்கத் தாள்களையும் அளித்தலும், வழங்குதலும் ;

(உஉ) வங்கி புரியக்கூடிய பணிகளுக்குப் பிரதிபயனாக தரகுபணங்கள், தரகுக் கூலி, வட்டி, ஊதியம் அல்லது கட்டணங்கள் பெற்றுக்கொள்ளுதல் ;

(ஊஊ) இன்னலுற்ற தொழிற்றுறைகளைப் புனரமைக்கப் பொறுப்பேற்றல் ;

(எஎ) ஏதேனும் கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்புமுயற்சியின் உற்பத்திப் பொருள் எதனையும் விற்பனை செய்வதற்கு அல்லது சந்தைப் படுத்துவதற்கு அவசியமான ஒழுங்கமைப்பை அமைத்தல் அல்லது அமைக்க உதவுதல் ;

(ஏஏ) கமத்தொழில், கைத்தொழில், வர்த்தகச் செயற்பாடுகளுக்குத் தேவையான பண்டகசாலைகளையும், குதங்களையும், களஞ்சியங்களையும் நிருமாணிப்பதில் ஈடுபடுதல் ;

(ஐஐ) ஏதேனும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை அல்லது ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக தொழில் முயற்சிகளையோ ஏனைய தொழில் முயற்சிகளையோ கொள்ளுதல் அல்லது கொள்வனவு செய்தலும் ; அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில் முயற்சியை முகாமை செய்தல் அல்லது முகாமை செய்ய ஒழுங்குபடுத்துதல் அல்லது அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில்முயற்சியை வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஒஒ) பண்டகசாலைகளையும், குதங்களையும், களஞ்சியசாலைகளையும், கட்டிடங்களையும், எந்திரத் தொகுதிகளையும் சாதனத்தையும், ஏனைய பண்டங்களையும் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல், பூரணமாக விற்றல் அல்லது வாடகைக் கொள்வனவின் மீது விற்றல்,

(ஓஓ) வங்கியின் பணங்களை முதலீடு செய்தல் ;

(ஔஔ) பொருளாதார, நிதி, அபிவிருத்தி, முகாமைத்துவத் துறையிலும் ஏனைய தொடர்புபட்ட துறைகளிலும் மதிப்பாய்வுகளையும், கற்கைகளையும், கருத்தரங்குகளையும் நடாத்துதல் ;

(கக) லொத்தர்களையும், பரிசுப்போட்டிகளையும் நடாத்துதல் ;

(ஙங) இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை விசேட உரிமமளிக்கப்பட்ட வங்கி ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கக்கூடிய வேறு ஏதேனும் தொழில்.

42. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

43. (1) இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தில் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் உரிமமொன்று பெறுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அதிகாரசபை எந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதோ அந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இடையில் முரண்பாடு காணப்படினுங்கூட, அத்தகைய எழுத்திலான சட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டு (19 ஆம் பிரிவைத் தவிர்த்து) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று முடிவுறாததும், முடிவடையாததும் உள்ள எல்லாச் செயல்களும், முடிபுகளும் அல்லது காரியங்களும் அத்தகைய முரண்பாடு எப்படியிருப்பினும், தொடரப்பட்டு முடிவாக்கப்படுதல் வேண்டும். பேணல் வாசகம்.

(2) இச்சட்டத்தின் 25 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவினால் சுமத்தப்பட்டவையும், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் செயலாளர் ஒருவர் கொண்டிருக்கத் தேவைப்படுத்தப்பட்டவையுமான தகைமைகள், (19 ஆம் பிரிவு தவிர்ந்த) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் செயலாளராகப் பதவி வகிக்கும் எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஆள் வங்கியின் முழுநேர ஊழியர் ஒருவராகச் செயலாளர் பதவியை வகித்தால் மட்டுமே, ஏற்புடைத்தாதல் ஆகாது.

உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் அசைவற்ற ஆதனத்தையும், அசைவற்ற ஆதனம் மீதான குத்தகை உரிமைகளையும் உரித்தாக்கும் கட்டளை.

44. (1) இச்சட்டத்தின் VIII அ என்னும் பாகம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிப் பொறுப்பு முயற்சியின் எப்பாகமும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் இன்னொரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரித்தாக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய பொறுப்புமுயற்சி உரித்தாக்கப்பட்ட திகதிக்கு முற்பட்ட நாளன்று, முதலாவதாகக் கூறப்பட்ட வர்த்தக வங்கியினால் மொத்தமாக வைத்திருக்கப்படும் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தையும், அத்தகைய முதலாவதாகக் கூறப்பட்ட வர்த்தக வங்கி எந்த அசைவற்ற ஆதனம் மீது குத்தகை உரிமைகளைக் கொண்டுள்ளதோ அந்த ஏதேனும் அசைவற்ற ஆதனத்தையும் இரண்டாவதாகக் கூறப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரித்தாக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைமூலம் செய்யப்பட்ட உரித்தாக்கல் தொடர்பில், இரண்டாவதாகக் கூறப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு, இரண்டாவதாகக் கூறப்பட்ட வர்த்தக வங்கியிடம் அத்தகைய முதலாவதாகக் கூறப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழில் உரித்தாக்கப்பட்ட திகதியன்று இரண்டாவதாகக் கூறப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியையும் அத்தகைய உரித்தாக்கல் தொடர்பான எவையேனும் இயைபான கருமங்களையும் கருத்திற்கெடுத்துக் கொண்டதன் பின்னர் பணச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டவாறான அத்தகைய தொகையிலான நட்ட ஈட்டைச் செலுத்துதல் வேண்டும்.

இலக்கமிடப்பட்ட கணக்குகள் தொடர்பிலான நிலைபெயர்கால ஏற்பாடு.

45. (1) இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தில் IV அ என்னும் பாகம் நீக்கப்பட்டிருப்பினுங்கூட, இலக்கமிடப்பட்ட கணக்கின் சொந்தக்காரர், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான திகதியிலிருந்து தொடங்கும் இரண்டாண்டு காலப்பகுதிக்குள், அத்தகைய கணக்கை மூடிவிடுதல் வேண்டும் என்பதுடன் கணக்கை மூடும்வரையில் அக்கணக்கை நடைமுறைப்படுத்த உரித்துடையவராதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கணக்கு வைப்பிலிடப்பட்ட பணங்களின் மீது வட்டியாக செலுத்தப்படக்கூடிய ஏதேனும் பணத்தொகையைத் தவிர அத்தகைய இலக்கமிடப்பட்ட கணக்குக்கு நிதி எதுவும் வரவிலிடப்படுதல் ஆகாது.

(2) இலக்கமிடப்பட்ட கணக்கொன்றில் சொந்தக்காரர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி அந்த உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய கணக்கை மூடத்தவறியிடத்து, அத்தகைய கணக்கு, அக்காலப்பகுதி முடிவடைந்ததிலிருந்தும், முடிவடையும் திகதிக்குப் பின்னரும், அது இலக்கமிடப்பட்ட கணக்கொன்றாக இருப்பதன் பயனை அதற்கு வழங்கப்படும் வசதியைத் தப்பக் காதொழிதல் வேண்டும்.

"இப்பிரிவின் நோக்கத்திற்காக "இலக்கமிடப்பட்ட கணக்கு" என்பது முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆ எனும் பிரிவிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

பிரிவு 83 ஆவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள ஒரு உரிமமளிக்கப் பெற்ற வர்த்தக வங்கியினால் அப்பிரிவு தொடங்குவதற்கு முன்னர் கொள்ளப் பட்ட ஆதனமும் செய்யப் பட்ட எல்லாச் செயல்களும் வலுவுடையன வாதல் வேண்டுமென்பது.

46. ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 83ஆ என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பெற்ற வர்த்தக வங்கியினால் கொள்ளப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் ஆதனத்திலுள்ள அக்கறை ஒவ்வொன்றும் அத்துடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 83ஆ எனும் பிரிவு தொடங்கும் திகதிக்கு முன்னரும் அவ்வங்கி தொடர்பில் அச்சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவின் கீழ் உரிமம் ஒன்று வழங்கப்பட்ட திகதியன்றும் அதன் பின்னரும் ஏதேனும் அத்தகைய வங்கியினால் செய்யப்பட்ட எல்லாச் செயல்களும், எல்லா நோக்கங்களுக்காகவும் விடயத்திற்கேற்றாற்போன்று செல்லுபடியுள்ள விதமாகக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் செல்லுபடியுள்ள விதமாகச் செய்யப்பட்டிருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,307 (வெளிநாட்டு) ரூபா 1,642 ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் வருகின்ற ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டுப் பணியகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் ஹவுஸ், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.